**தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்ந்திடும் இந்த சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக மதிப்பிடப்படும் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்திடும் வகையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட ஆலோசனைகள் பல வழங்கி வழிநடத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

2. காலத்தை வென்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கினை இம்மாமன்றத்தில் பதிவு செய்து என் உரையினைத் தொடங்குகிறேன்.

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி**

***(குறள் - 118)***

சமநிலையில் நின்று, பொருளின் எடையை சீர்தூக்கிக் காட்டும் துலாக்கோல் போல் எப்பக்கமும் சாயாமல் நேர்மையுடன் நடுநிலை பேணுவதே சான்றோர்க்கு அழகு.

வான்புகழ் கொண்ட வள்ளுவம் காட்டிய வழியில் நடுநிலை தவறாமல் நம்மையெல்லாம் வழிநடத்துவது மட்டுமன்றி, எத்தனை தடைகள் எதிர் வந்தாலும் சமநிலை தவறாது தமிழ்நாட்டின் நலனைக் காத்திடுவதில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டிடும் உறுதியை நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

3. எனது உரையின் முன்னோட்டமாக, வங்கக்கடலை நோக்கி கம்பீரமாக வீற்றிருக்கும் நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றப் பேரவையின் வழிகாட்டுதலோடு தமிழ்நாடு புரிந்திட்ட சாதனை வரலாற்றை விவரிக்க விரும்புகிறேன். இன்றைய

தமிழ்நாடு, கல்வியில், சுகாதாரத்தில், வேளாண்மையில், தொழில் துறையில் சிறந்து விளங்குவதற்கான விதைகள் நூறாண்டுகளுக்கு முன்பே நீதிக்கட்சியின் ஆட்சியில் விதைக்கப்பட்டவை.

4. நமது நாடு விடுதலை பெற்றபின் சில மாநிலங்கள் வறுமை ஒழிப்பிற்கு முன்னுரிமை கொடுத்தன. வேறு சில மாநிலங்களோ தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தன. ஆனால், தமிழ்நாடு மட்டுமே வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், கட்டமைப்பு வசதிகள், தொழில் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு முன்னேறத் தொடங்கி வெற்றியும் கண்டது.

- அனைவருக்கும் அடிப்படைக் கல்வி என்பதை நீண்டகால இலக்காகக் கொண்டு நாடு நகர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், கிராமங்கள்தோறும் கல்விக்கூடங்களை உருவாக்கியது நாம்.

- மழலைக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், காலை உணவுத் திட்டம் என்று தமிழ்நாடு அறிமுகப்படுத்திய மக்கள்

நலத்திட்டங்களைப் பார்த்து இந்தியத் திருநாடு மட்டும் அல்ல, உலக நாடுகளே வியந்து பாராட்டிக் கொண்டுள்ளன.

- பெருந்தொழிற்சாலைகளின் தேவைக்கென மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், கடைக்கோடி குக்கிராமங்களும் மின்வசதி பெற்றிட வேண்டும் எனச் சிந்தித்தவர்கள் நாம்.

- நாடெங்கும் பெருநகரங்களின் வளர்ச்சியில் குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்ட காலகட்டத்தில், ஏழை, எளிய, நகர்ப்புர மக்களுக்கு பன்னடுக்குக் குடியிருப்புகளை உருவாக்கிட தனி வாரியம் கண்டவர் நாம்.

- முன்னோடியாக மகளிருக்கு வாக்குரிமை வழங்கிய சென்னை மாகாணம் காட்டிய வழியில், பிற்காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிய முன்னணி மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடும் இடம் பெற்றது.

- எவ்வித சமரசத்திற்கும் இடம் தராமல், இரு மொழிக் கொள்கையினை தமிழ்நாடு தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம், தமிழ்ப் பண்பாட்டினைப் பாதுகாத்தது மட்டுமல்ல, ஆங்கிலத்தின் துணையோடு உலகை வெல்லும் தணியாத தாகம் கொண்டு தரணியில் வலம் வரத் தொடங்கினர் நமது இளைஞர்கள்.

5. பிரபல பிரெஞ்சு பொருளாதாரப் பேராசிரியர் தாமஸ் பிக்கட்டி அவர்கள் “Inequality is a choice, but we can choose a different path” என குறிப்பிட்டதைப் போல, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுத்த பாதை தனித்துவம் மிக்கது. மனிதநேயம், சமூக நீதி, பரவலான பொருளாதார வளர்ச்சி, மகளிர் நலன், விளிம்பு நிலை மக்கள் முன்னேற்றம், தமிழ்ப் பண்பாடு என தமிழ்நாடு வெற்றிநடை பயின்ற அந்தப் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

6. இந்த நூற்றாண்டுப் பயணம் வெற்றிகரமானது என நாம் பெருமிதம் கொள்வது எதிர்காலத்தில் தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி, மேலும் எழுச்சியுடன் செல்ல வேண்டிய

தேவையினைக் குறிக்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் திசைகாட்டியாக முத்தமிழறிஞர் கலைஞர், கால் நூற்றாண்டுக்கு முன்னர் நிகழ்த்திய சாதனைகள் இரண்டினை இம்மாமன்ற உறுப்பினர்கள் வாயிலாக தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு நினைவுபடுத்திட நான் விழைகிறேன். அகில உலகமே புத்தாயிரமாவது ஆண்டுத் தொடக்கவிழாக் கொண்டாட்டங்களில் திளைத்திருந்த போது, வான்புகழ் வள்ளுவருக்கு குமரிமுனையில் வானுயரச் சிலை எடுத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர், அதே ஆண்டு சென்னையில் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினையும் திறந்து வைத்ததன் மூலம் தமிழருக்கு ஒரு மகத்தான செய்தியினை உணர்த்திச் சென்றிருக்கிறார். "**ததும்பும் தமிழ்ப்பெருமிதம் ஒருபுறம், உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம் மறுபுறம்**" என நமது எதிர்காலப் பயணம் அமைந்திட வேண்டும் எனக் குறிப்பால் உணர்த்தி, இன்று இம்மாமன்றத்தில் ஓவியமாய் உறைந்து நின்று நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

7. கடந்து வந்த நூற்றாண்டுப் பயணத்தின் காலடித் தடங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம், எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான பாதையினை நாம் திட்டமிட வேண்டும். நாம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களுக்கு, அறிவியல்வழி நின்று, தொழிற்நுட்பத்தின் துணைகொண்டு பகுத்தறிந்து தீர்வுகள் காண வேண்டும். தமிழ்நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களின் வளர்ச்சி முறைப்படுத்தப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வேளாண் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் புதிய உயரங்களை அடைய முன் முயற்சிகள் தேவைப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவு யுகத்தில் இளைஞர்களின் தனித்திறன் மேம்பாடு உரிய கவனம் பெற வேண்டும். பெருமளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடெங்கும் பரவலாக உருவாகிட வேண்டும். நவீன கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முனையும்போது, பசுமை ஆற்றல் வளங்களையும் முறையாகப் பயன்படுத்திட வேண்டும். வளர்ந்த நாடுகளுக்கு இணையான வளர்ச்சியை தமிழ்நாடு விரைந்து அடைந்திட விரிவான

செயல்திட்டங்களை உடனடியாக நாம் உருவாக்கிட வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது எழுந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

8. எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் முக்கிய நோக்கங்களை உள்வாங்கி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட வழிகாட்டியாக அமைந்தவை பேரறிஞர் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைதான். நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்த பேரறிஞர் அண்ணா 1968-69 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்ட வாசகங்களை நினைவுகூற விழைகிறேன்.

> *"இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களில் ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும், செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலை மாறிவிட்டது.*

*குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது".*

பேரறிஞர் அண்ணா வழிகாட்டிய திசையில் பயணித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் நலன் காத்திடும் கருவியாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைக்க பெருமுயற்சி எடுத்திருக்கிறோம்.

**தமிழ் மொழி வளர்ச்சி**

9. "**வள்ளுவன் தன்னை**
**உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட**
**தமிழ்நாடு**"

குமரி முனையில் ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு நடுவே அமைதியின் திருவுருவாய் நிமிர்ந்து நின்று, தமிழ்ச் சமூகத்தை என்றென்றும் வழிநடத்தும் அய்யன் திருவள்ளுவரின் வானுயரச் சிலை எழுப்பப்பட்ட வெள்ளிவிழா ஆண்டினை தமிழ்கூறும்

நல்லுலகம் அண்மையில் கொண்டாடி மகிழ்ந்தது. இத்தரணியில் கடலும் மலையும் உள்ளவரை நிலைத்து நிற்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட திருவள்ளுவரின் பெருஞ்சிலைக்கு '**பேரறிவுச் சிலை**' எனப் பெயரிட்டு அழைக்கலாம் என அறிவித்தவர் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

10. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள் உரைத்திடும் உன்னத வாழ்வியல் நெறிகளை உலகெங்கும் பரப்புவது நமது தலையாய கடமையாகும். காலம்தோறும் அறிஞர்களின் பெருமுயற்சியாலும், பல கல்வி நிறுவனங்களின் முன்னெடுப்பினாலும், இதுவரை திருக்குறள் 28 இந்திய மொழிகளிலும் 35 உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்து முடிந்த சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில், ஆசிய, ஆப்ரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பேசப்படும், 28 வெவ்வேறு மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்திட பன்னாட்டுப் பதிப்பாளர்கள் முன்வந்துள்ளனர். இதைத் தொடர்ந்து, 45 பல்வேறு உலக மொழிகளில் கூடுதலாக மொழிபெயர்க்கப்படும்போது,

ஐக்கிய நாடுகள் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட 193 உலக நாடுகளின் அனைத்து அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையினை திருக்குறள் பெற்றிடும். வான்புகழ் வள்ளுவத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் உயரிய நோக்கங்கொண்ட இந்த மொழிபெயர்ப்புத் திட்டத்தை, பிற கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிட, 133 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. இது மட்டுமன்றி, தலைசிறந்த தமிழ் இலக்கிய நூல்களை உலக மொழிகளில் கொண்டு செல்லும் மகத்தான முயற்சியின் முதற்படியாய், தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்நூறு தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திடும் மாபெரும் திட்டத்தினை, இருபதுக்கும் மேற்பட்ட புகழ்பெற்ற பன்னாட்டு மற்றும் இந்திய அளவிலான முன்னணி பதிப்பகங்களுடன் இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கூட்டு வெளியீடாகச் செயல்படுத்தும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டிற்கு நூறு நூல்கள் வீதம் ஐந்நூறு ஆங்கில மொழிபெயர்ப்பு

நூல்களைப் பதிப்பிக்கும் இம்முயற்சிக்கு முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப நூல்களை, துறை வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி இயந்திர மொழியாக்கத் (Machine Translation) தொழில்நுட்பத்தின் துணையுடன் தமிழ் மொழியில் உடனுக்குடன் பதிப்பாக்கம் செய்திட 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். மேலும், பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், அரிய ஆவணங்கள் மற்றும் முக்கிய ஆளுமைகளின் கையெழுத்துப் பிரதிகளை மின் பதிப்பாக்கம் செய்திட, வரும் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. அறிவைப் பரவலாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி மற்றும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தப்பட்டு வரும் புத்தகத் திருவிழாக்களை நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

இதன் அடுத்தகட்ட நகர்வாக, தமிழர்கள் அதிகம் வசிக்கும் புதுதில்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, திருவனந்தபுரம் போன்ற பிற இந்தியப் பெருநகரங்கள் மட்டுமன்றி வெளிநாடுகளிலும், குறிப்பாக சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் துபாய் ஆகிய நகரங்களிலும், தமிழ்ப் புத்தகக் கண்காட்சிகள் இந்த ஆண்டு முதல் நடத்தப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்கும் தமிழ் மரபை முறையாக அறிமுகம் செய்திடும் வகையில், அயலகத் தமிழர் நல வாரியம் மூலம் அவர்களுக்குத் தமிழ்மொழி மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் பயிற்றுவிக்கும் 100 தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களைக் கொண்டு நேரடி வகுப்புகள் நடத்திட, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. தமிழ்ச் செம்மொழியின் பெருமையினையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரவிடச் செய்திடும் நோக்கத்தில், தமிழ்நாடு மட்டுமன்றி

இதர இந்திய நகரங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் உலகத் தமிழ் மையங்களில் பயின்றிடும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில், கணினிவழித் தேர்வு முறையில் '**உலகத்தமிழ் ஒலிம்பியாட்**' போட்டி இனி ஆண்டுதோறும் நடத்தப்படும். உலக அளவிலான வெற்றியாளர்கள் மட்டுமன்றி, தேசிய மற்றும் மாநில அளவில் சிறப்பிடம் பெற்றிடும் மாணவர்களுக்குமான மொத்தப் பரிசுத் தொகையாக ஒரு கோடி ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கப்படும்.

16. இந்தியத் திருநாடு பன்மொழிகளின் சங்கமம் என்பதைக் கருத்தில் கொண்டு, உலகின் மிக மூத்த தனிச் செம்மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழியின் தொன்மை மற்றும் தொடர்ச்சியினை இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில், '**அகரம் - மொழிகளின் அருங்காட்சியகம்**' மதுரை உலகத் தமிழ்ச்சங்க வளாகத்தில் அமைக்கப்படும். திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த தமிழ்மொழிக்கும் இதர இந்திய மொழிகளுக்குமான மொழியியல் உறவு, தென்னிந்தியப் பழங்குடி மக்கள் பேசும் மொழிகள் குறித்த பதிவுகள், பாறை ஓவியங்கள் தொடங்கி, கல்வெட்டுகள், அச்சுக்கலை வழியே கணித்தமிழ் வரையிலான தமிழ்மொழியின்

நீண்ட பயணம் குறித்த பல அரிய பதிவுகள் உயர் தொழில்நுட்ப வசதியுடன் இந்த மொழிகளின் அருங்காட்சியகத்தில் இடம் பெறும்.

**பண்பாடு**

17. தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையினை, இலக்கியம், வரலாறு மட்டுமன்றி தொல்லியல் அகழ்வாராய்ச்சி மூலம் வெளிக்கொணர்ந்த சான்றுகளையும் அறிவியல் முறைப்படி ஆய்வுசெய்து அறிவுலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறுவிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நமது அரசு எடுத்து வருகிறது.

18. தமிழ்நாட்டின் பல்வேறு இரும்புக்கால தொல்லியல் தளங்களில் சேகரிக்கப்பட்ட சான்றுகள் குறித்து, உலகப் புகழ்பெற்ற ஆய்வகங்களில் இருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், "**தமிழ் நிலப்பரப்பில் 5,300 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பு உருக்கும் தொழில்நுட்பத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது**" எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் உலகிற்கு அறிவித்தார்கள். உலகின் தலைசிறந்த தொல்லியல் ஆய்வாளர்களும், தேசிய அளவிலான தொழில்நுட்ப

வல்லுநர்களும் இந்த ஆய்வு முடிவுகளை வரவேற்றும், பாராட்டியும் உள்ளனர். இரும்பின் தொன்மை குறித்தும் பழந்தமிழரின் தொழில்நுட்பத் திறன் குறித்தும் வெளியான இந்த ஆராய்ச்சி முடிவுகளை உலகத் தமிழர்கள் பெருமகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்ந்தார்கள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இவ்வேளையில், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இம்மாமன்றத்தில் பெருமிதத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, வரலாற்றில் இடம்பெறவிருக்கும் வாசகத்தை நாம் நினைவுகூர்ந்து, இரும்பின் உறுதியோடு உரக்கச் சொல்வோம் – "**இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும்**".

19. தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகளை உலகறியச் செய்திடும் முயற்சியின் தொடர்ச்சியாக, எதிர்வரும் 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் சிவகங்கை மாவட்டம்-கீழடி, தூத்துக்குடி மாவட்டம் - பட்டணமருதூர், தென்காசி மாவட்டம் - கரிவலம்வந்தநல்லூர், நாகப்பட்டினம் மாவட்டம் - நாகப்பட்டினம், கடலூர் மாவட்டம் - மணிக்கொல்லை, கள்ளக்குறிச்சி மாவட்டம் -ஆதிச்சனூர்,

கோயம்புத்தூர் மாவட்டம் - வெள்ளளூர் மற்றும் சேலம் மாவட்டம் - தெலுங்கனூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும். பழந்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடும் பயணம் அண்டை மாநிலங்களில் உள்ள பாலூர் (ஒடிசா), வெங்கி (ஆந்திரா), மஸ்கி (கர்நாடகா) ஆகிய பகுதிகளுக்கும் விரிவடைந்திருக்கிறது.

20. அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களில், தொல் மரபணுவியல் (Ancient DNA analysis), உலோகவியல் பகுப்பாய்வு (Metallurgical analysis), நுண் தாவரவியல் (Micro Botany), மகரந்தப் பகுப்பாய்வு (Pollen analysis), தூண்டொளி வெப்பக் காலக் கணிப்பு (Optically Stimulated Luminescence Dating), மட்பாண்டவியல் (Ceramic Technology) உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப ஆய்வுகள், உலகப் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சி மற்றும் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ள 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

21. மேலும், தென்கிழக்கு ஆசியா, மத்திய தரைக்கடல் பகுதி, அரேபியத் தீபகற்பம் மற்றும் ரோமப் பேரரசுப் பகுதிகளுடன் பழந்தமிழர் மேற்கொண்டிருந்த கடல்வழி வணிகச் சிறப்பினை வெளிக்கொணரும் வகையில், பல்வேறு ஆழ்கடல் அகழாய்வுகளை தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இந்த ஆண்டு புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களின் ஆலோசனையுடனும், முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையோடும், காவிரிப்பூம்பட்டினம் முதல் நாகப்பட்டினம் வரை விரிவான ஆழ்கடல் அகழாய்வு மேற்கொள்ளப்படும்.

22. தமிழ்நாடெங்கும் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களை, உயர்தொழில்நுட்ப வசதிகள் துணை கொண்டு அழகுற காட்சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகங்கள் அமைப்பதன் மூலம், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை உலகிற்கு உரிய முறையில் பறைசாற்றிட முடியும் என இந்த அரசு கருதுகிறது. அந்த வகையில், கொடுமணல் அகழாய்வுகளை முன்னிலைப்படுத்தி, ஈரோடு மாவட்டத்தில் ‘**நொய்யல்**

**அருங்காட்சியகம்**' 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சங்ககாலப் பாண்டியரின் கடல்வழி வணிகச் சிறப்பை விளக்கிடும் வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் '**நாவாய் அருங்காட்சியகம்**' 21 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் உருவாக்கப்படும்.

23. சிந்துவெளி பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நிறைவையொட்டி, சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் 'சிந்துவெளி பண்பாட்டு அரங்கம்' உருவாக்கப்படும். மேலும், தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் பிற மாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழரின் தொன்மை மற்றும் தொடர்ச்சியின் சிறப்புகளை அறிமுகப்படுத்தும் விதமாக, மாமல்லபுரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தமிழர் பண்பாட்டு அருங்காட்சியகங்கள் உருவாக்கப்படும்.

24. காலத்தை வென்ற கைவினைஞர்களின் கைவண்ணத்தில் ஐம்பொன்னால் உருவான இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகள் எழும்பூர் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. சிற்ப அமைதி, உடல்

நெகிழ் தோற்றத்தன்மை, எழில்மிகு முத்திரைகள் கொண்ட சிற்பத் திருமேனிகளை வெளிநாட்டவரும் கண்டு வியக்கும் வகையில் மரபுசார் கட்டடக்கலை வடிவமைப்புடன் கூடிய காட்சி அரங்கம் ஒன்று 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்படும்.

**ஊரக வளர்ச்சி**

25. ஓலைக் குடிசைகளில் வசிக்கும் ஏழைக் குடும்பங்கள் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டிருந்த கருணையினையும், குடிசையில்லா தமிழ்நாடு அமைந்திட வேண்டும் என்ற அவரது பெருங்கனவையும் நினைவுகூறும் வகையில், கடந்த ஆண்டு '**கலைஞரின் கனவு இல்லம்**' எனும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் நோக்கத்துடன், சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டும் பணிகள், அனைத்து மாவட்டங்களிலும் விரைவாக நடைபெற்று வருகின்றன. அதைத் தொடர்ந்து, 2025-26 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் தொடங்கப்படும்.

26. தமிழ்நாட்டின் கடைக்கோடி குக்கிராமங்களையும் சென்றடையும் வகையில் தரமான சாலை வசதிகளை உருவாக்கிடும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட '**முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்**' கீழ் 2025-26 ஆம் ஆண்டு 6,100 கிலோமீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகள் 2,200 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். மேலும், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கென ஒவ்வொரு ஆண்டும் மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து உரிய நிதி ஒதுக்கிட முடிவு செய்து, 2025-26 ஆம் ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் விடுவிக்கப்படும்.

27. தமிழ்நாட்டில் கடந்த 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் ஊரகப் பகுதிகளில் வாழும் விளிம்புநிலை மக்களுக்காகக் கட்டப்பட்டு, தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு மாற்றாக, புதிய வீடுகளை கட்டித் தர இந்த அரசு முடிவு செய்துள்ளது. 2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் புதிய வீடுகள் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

28. தமிழ்நாட்டின் அனைத்து குக்கிராமங்களும் தன்னிறைவு பெற்றிடும் வகையில், பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தரும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-IIன் கீழ், 2025-26 ஆம் ஆண்டில் 2,329 கிராம ஊராட்சிகளில் 1,087 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

29. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. 2023-24 ஆம் ஆண்டில் 40.87 கோடி மனிதசக்தி நாட்கள், 13,392 கோடி ரூபாய் செலவினத்தில் எய்தப்பட்டுள்ளது. ஆனால், 2024-25 ஆம் ஆண்டில் 27-11-2024 முதல் 11-03-2025 வரை வேலைசெய்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய 2,839 கோடி ரூபாய் ஊதியம் மற்றும் 957 கோடி ரூபாய் பொருட்கூறுக்கான நிதி என மொத்தம் 3,796 கோடி ரூபாயை ஒன்றிய அரசு இதுவரை விடுவிக்காமல் நிலுவையில் வைத்துள்ளது. இந்த நிலுவைத்

தொகையை உடனே விடுவித்திட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

30. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 29,465 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிருவாகம்**

31. தமிழ்நாட்டில் நகர்ப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், நவீன மின் மயானம், நூலகங்கள் மற்றும் கணினியுடன் கூடிய அறிவுசார் மையங்கள் உள்ளிட்ட சமுதாய அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வரும் **கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 4,132 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக, வரும் நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32. 2025-26-ஆம் ஆண்டில் பல்வேறு திட்ட நிதிகளைத் திரட்டி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 6,483 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 3,750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ், குறிப்பாக 570 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 486 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியிலும், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் 130 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

33. சென்னை மாநகரத்தில் வாகனப் போக்குவரத்து பன்மடங்காக அதிகரித்துள்ளதால் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக வேளச்சேரி, கிண்டி உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் சுமார் 7 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், வேளச்சேரி பிரதான சாலையிலிருந்து குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 3 கி.மீ. நீளத்திற்கு ஒரு மேம்பாலம் 310 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அதேபோன்று

இரயில்வே துறையுடன் இணைந்து கொருக்குப்பேட்டை இரயில்வே மேம்பாலம், சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்படும்.

34. சென்னை பெருநகர மாநகராட்சியின் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி எரிவாயு (Bio CNG) நிலையம், இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம், தானியங்கி பொருள் மீட்பு மையம் (Automatic Material Recovery Facility) மற்றும் 21 மெகாவாட் திறன் கொண்ட திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 3,450 கோடி ரூபாய் திட்டக் காலத்திற்கான மதிப்பீட்டில் தொடங்கப்படும். இதைப் போன்று, திறன்மிக்க திடக்கழிவு மேலாண்மை மற்றும் மின்சார உற்பத்தி செய்யும்பொருட்டு, சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளுக்கு அருகிலுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குப் பயன்படும் வகையில், திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலை (Waste to Energy Plant)

தாம்பரம் மாநகராட்சிப் பகுதியில் நிறுவப்படும். இத்திட்டத்தின் கீழ் 1,500 டன் மறுசுழற்சி செய்ய இயலாத திடக்கழிவின் செயலாக்கம் மூலம் தினந்தோறும் 15 முதல் 18 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க இயலும்.

35. நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களுக்குத் தூய்மையான மற்றும் பசுமையான வாழிடச் சூழலை உருவாக்கும் பொருட்டு, அடையாறு நதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் திட்டம் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் தொடங்கப்பட்டுள்ளது. முப்பது மாத காலத்திற்குள் பணி நிறைவடையக் கூடிய இத்திட்டத்தின் முதற்கட்டமாக, சைதாப்பேட்டை முதல் திரு.வி.க. பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள் இப்பணிகள் முடிக்கப்படும். பருவநிலை மாற்றத்திலிருந்து மீட்கும் தன்மையுடைய ஏழு மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர்ப் பூங்காக்கள் (Sponge Park) சென்னை பெருநகரப் பகுதியில் 88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

36. மேலும், தமிழ்நாட்டில் உள்ள காவிரி, வைகை, நொய்யல், தாமிரபரணி ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள மாநகராட்சிப் பகுதிகளிலிருந்து உருவாகும் கழிவுநீர், ஆற்றில் நேரடியாகக் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நடைபாதைகள், தெருவிளக்குகள், நவீன ஓய்வறைகள், குழந்தைகள் விளையாட்டுப் பூங்காக்கள் மற்றும் இதர நவீன வசதிகளுடன் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நதிக்கரை மேம்பாட்டுப் பணிகள் திருச்சி, மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளில் மொத்தம் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.

37. தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் ஐந்து நீர்சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மூன்று கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்களில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த ஒவ்வொரு குடிநீர் நிலையத்தில் இருந்தும் குடிநீர் விநியோகம் நகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு பிரதானக் குழாய்கள் மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், தேவைப்படும்போது

ஒரு பகுதியின் உபரி நீரை, பற்றாக்குறை உள்ள மற்றொரு பகுதிக்கு மாற்ற இயலவில்லை. எனவே, '**முதன்மைச் சுற்றுக் குழாய் திட்டம்**' எனும் புதிய திட்டத்தின் மூலம் அனைத்து நீர்ப்பகிர்மான நிலையங்களையும் இணைத்து, சென்னை மாநகரில் உள்ள அனைத்து குடிநீர் விநியோக நிலையங்களுக்கும் சமமான அளவில் குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். சமச்சீரான குடிநீர் விநியோகத்தை உறுதிசெய்திடும் இத்திட்டம் 2,423 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த 3 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்.

38. சென்னைப் பெருநகர மாநகராட்சியில் 200 கோடி ரூபாய் அளவிலும், கோவை மாநகராட்சியில் 120 கோடி ரூபாய் அளவிலும், திருச்சி மாநகராட்சியில் 100 கோடி ரூபாய் அளவிலும் மற்றும் திருப்பூர் மாநகராட்சியில் 100 கோடி ரூபாய் அளவிலும் நகர்ப்புர நிதிப் பத்திரங்கள் வாயிலாக, கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம் நகர்ப்புர உட்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

39. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் உள்ள, நாற்பது ஆண்டுகளுக்கு மேலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. செயல்திறன் குறைந்த பழைய மின் இறைப்பான்கள் மற்றும் குழாய்கள் ஆகியவற்றை மாற்றிடவும், தேவைப்படும் இடங்களில் நீர் ஆதாரங்களைப் புதுப்பித்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்தவும், இந்த ஆண்டு 675 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 102 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம், அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு, இத்திட்டப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் சீராக நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

40. எதிர்வரும் 2025-26 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முன்னுரிமை அடிப்படையில் கீழ்க்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிடும்.

- புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மாநகராட்சி, அறந்தாங்கி நகராட்சி மற்றும் 526 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று

1,820 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4.07 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி நகராட்சிகள், தரங்கம்பாடி, மணல்மேடு மற்றும் குத்தாலம் பேரூராட்சிகள் மற்றும் 1,042 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 2,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11.22 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி மற்றும் 493 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 864 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.64 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 639 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 370 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 1,252 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 890 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- ஈரோடு மாவட்டத்தில் உள்ள 214 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 374 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 92,000 மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 138 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 76,000 மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

41. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 26,678 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமச்சீர் வளர்ச்சி**

42. சென்னை மாநகரத்தின் சமச்சீர் வளர்ச்சியை உறுதிசெய்திட '**வடசென்னை வளர்ச்சித் திட்டம்**' என்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பேருந்து நிலையம் அமைத்தல், குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல், குடிநீர்ப் பணிகள், கல்வி மற்றும் மருத்துவ உட்கட்டமைப்புப் பணிகள், ஏரிகள் மற்றும் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள், கடற்கரை மேம்படுத்துதல், மீன் சந்தை அமைத்தல், உடற்பயிற்சி நிலையம், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுக் கட்டமைப்புப் பணிகள், மின் மயானங்கள் அமைத்தல், துணை மின் நிலையம் மற்றும் மின் மாற்றிகள் தரம் உயர்த்தும் பணிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் போன்ற பணிகள் 6,858 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

43. நாட்டிலேயே அதிக நகரமயமாதல் மற்றும் அதனுடன் எழும் சவால்களை சந்தித்து வரும் மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று. அதிலும் குறிப்பாக, சென்னை, கோவை, திருப்பூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற நகரங்களை நோக்கி மாநிலத்தின்

பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வருவதால், உயர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, சாலை வசதிகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் கழிவுநீர் அகற்றல் போன்ற அடிப்படைத் தேவைகளையும், பேருந்து வசதிகள், கல்வி மற்றும் பொது சுகாதார வசதிகளையும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் வழங்கிட, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. எனினும் பெருநகரங்களின் விரிவாக்கம் ஆங்காங்கே நடைபெறுவதைக் காட்டிலும், பொதுமக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்திடும் வகையில் ஒருங்கிணைந்த புதிய நகரங்களை உருவாக்குவது மிகவும் பொருத்தமானது எனும் நகரமைப்பு வல்லுநர்களின் கருத்தை ஏற்று முதற்கட்டமாக சென்னைக்கு அருகே ஓர் புதிய நகரம் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.

44. தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், நிதி நுட்ப வணிக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வளாகங்கள், வர்த்தக மையங்கள்,

மாநாட்டுக் கூடங்கள் மட்டுமன்றி, அரசு மற்றும் தனியார் துறையின் மூலம் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகள் அளிக்கும் நிறுவனங்களும் இந்நகரத்தில் அமைக்கப்படும். சமூகத்தின் உயர் வருவாய் கொண்ட வகுப்பினர், மத்திய தர வகுப்பினர் மற்றும் குறைந்த வருவாய் கொண்ட வகுப்பினர் என அனைவருக்குமான வீட்டு வசதிகள் நிறைந்த பன்னடுக்குக் கட்டடங்கள் கொண்டதாக இந்நகரம் அமையும். விரிவான சாலைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் பசுமை மின்சக்தி அமைப்புகள், பகிர்ந்த பணியிடச் சேவை மற்றும் நகர்ப்புரச் சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற பொழுது போக்குச் சேவை கட்டமைப்பு வசதிகளும் இந்நகரில் இடம்பெறும். சென்னை மாநகரை இப்புதிய நகரத்துடன் இணைத்திட உரிய சாலை வசதிகள், விரைவுப் பேருந்துகள், மெட்ரோ இரயில் விரிவாக்கம் ஆகியவையும் உருவாக்கப்படும். உலகத் தர வசதிகளுடன் கூடிய இப்புதிய நகரத்தை (Global City) உருவாக்கிடுவதற்கான முதற்கட்டப் பணிகளை டிட்கோ நிறுவனம் விரைவில் தொடங்கும்.

**மகளிர் நலன்**

45. ‘**ஆணுக்கிங்கே பெண் நிகர்**’ எனும் சரிநிகர் சமத்துவப் பாதையில் மகளிர் நலனுக்காக பல்வேறு முன்னோடி நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு சொத்துரிமையும், கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடும் அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு, மகளிரின் முன்னேற்றத்திற்குப் பல புதுமையான திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளது.

46. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாளிலேயே கையெழுத்திட்ட முதல் ஐந்து கோப்புகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கும் ‘**விடியல் பயணம்**’ என்ற மகத்தான திட்டமும் ஒன்று. தமிழ்நாட்டு மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் மூலம், பேருந்துப் பயணம் செய்வோர்களில் பெண்களின் சதவீதம் 40 லிருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தினமும், சராசரியாக 50 இலட்சம் மகளிர், பேருந்துகளில் இதுவரை 642 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர். மகத்தான இத்திட்டத்தினால் பெண்கள் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் சேமிக்க முடிகிறது என மாநில திட்டக்குழு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கான மானியத் தொகை 3,600 கோடி ரூபாயை 2025-26 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கியுள்ளது.

47. மகளிர் நலத் திட்டங்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல் அறிவிக்கப்பட்ட '**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்**' மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே பதினைந்து இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் பயன்பெறும் இல்லத்தரசிகளுக்கு, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்பது, அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாக இருப்பது மட்டுமன்றி, அவர்கள் கணிசமாக சேமிக்கவும் வழிவகுக்கிறது. இதுவரை, மகளிர் உரிமைத்தொகை பெற்றிடாத தகுதிவாய்ந்த இல்லத்தரசிகள்,

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திட உரிய வாய்ப்புகள் விரைவில் வழங்கப்படும். மகளிர் நலன் காக்கும் இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 13,807 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

48. ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் உயர்கல்வி பயில்வதை உறுதிசெய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், தற்போது நான்கு இலட்சத்து ஆறாயிரம் மாணவியர்கள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின், உயர்கல்வியில் சேரும் மாணவியர்களின் எண்ணிக்கை சென்ற கல்வியாண்டில் 19 சதவீதம் அதிகரித்து, கூடுதலாக 40,276 மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர் என்பதை பெருமையுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் நிதியாண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட 420 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

49. முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், தருமபுரி மாவட்டத்தில் தொலைநோக்குடன் விதைக்கப்பட்ட சுய உதவிக் குழு திட்டம், இன்று நாடெங்கும் கோடிக்கணக்கான மகளிரின் வாழ்வை மேம்படுத்திடும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி, சமூகத்தில் பெண்களுக்கு உரிய இடத்தினை உறுதிசெய்திடும் நோக்கில், அவர்களின் வளர்ச்சிக்கும், திறன் மேம்பாட்டிற்கும் தேவையான நலத் திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. தற்போது, 4.76 இலட்சம் மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. சுயஉதவிக் குழு இயக்கத்தில் இதுவரை இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்புநிலை வாழ் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு, 10,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். மேலும், வரும் நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு 37,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

50. தமிழ்நாட்டின் முத்திரை பதிக்கும் திட்டங்களில் ஒன்றான '**தோழி**' பணிபுரியும் மகளிர் விடுதிகள் ஏற்கெனவே தாம்பரம், திருச்சி உள்ளிட்ட 13 இடங்களில் 1,303 மகளிர் பயன்பெறும் வகையில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. எதிர்வரும் நிதியாண்டில், காஞ்சிபுரம், ஈரோடு, கரூர் மற்றும் இராணிப்பேட்டை உள்ளிட்ட மேலும் 10 இடங்களில் 800 பெண்கள் பயன்பெறும் வகையில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திடும் நோக்கத்துடன், நாட்டிற்கே வழிகாட்டும் வகையில், மாவட்டந்தோறும் தோழி விடுதிகள் அமைக்கப்படும் என்ற இலக்கை நோக்கி தமிழ்நாடு வெற்றிகரமாகச் சென்று கொண்டிருக்கிறது.

51. தமிழ்நாட்டின் குக்கிராமங்களில் இருந்தும் மாணவியர் தங்களது உயர்கல்விக் கனவை நனவாக்கிடும் வகையில் பெருநகரங்களுக்கு வருகை புரியும்போது, அவர்களுக்குத் தரமிக்க மற்றும் பாதுகாப்பான விடுதி வசதிகள் அமைத்திட வேண்டிய தேவையை அரசு உணர்ந்துள்ளது. எனவே, எதிர்வரும் நிதியாண்டில், சென்னை, கோவை மற்றும்

மதுரை ஆகிய மாநகரங்களில் தலா ஆயிரம் மாணவியர் தங்கும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் மொத்தம் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று மாணவியர் விடுதிகள் அமைக்கப்படும். தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தால் பராமரிக்கப்படவிருக்கும் இவ்விடுதிகளின் சேர்க்கையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படும்.

52. மூன்றாம் பாலினத்தவரின் நல்வாழ்விற்கென, நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு புதுமையான திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்து வாழ்க்கையில் வெற்றிபெற அவர்கள் உயர்கல்வி கற்பது இன்றியமையாததாகும். எனவே, புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டம் இவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

53. மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உரிய விழிப்புணர்வினையும், வேலைவாய்ப்புகளில் சம வாய்ப்பையும் வழங்குவதன் மூலமே, அவர்களுடைய கண்ணியமான வாழ்வினை உறுதிசெய்திட முடியும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த உயர் நோக்கத்தினை முன்னிறுத்தி, ஓர் முன்னோடி முயற்சியாக மூன்றாம் பாலினத்தவரை, போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில், உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, 50 மூன்றாம் பாலினத்தவர்களைக் கொண்டு, சென்னை, தாம்பரம், ஆவடி மாநகரங்களில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். இவ்வாறு பணிபுரியும் மூன்றாம் பாலினத்தவரின் மதிப்பூதியம், பயிற்சி மற்றும் சீருடை போன்றவை ஊர்க்காவல் படையினருக்குச் சமமான வகையில் வழங்கப்படும். இந்த முன்னோடி முயற்சி மூலம், மூன்றாம் பாலினத்தவர்களின் சுயமரியாதையுடன் கூடிய வாழ்வு உறுதி செய்யப்படுவதுடன்,

அவர்கள் சமூக நீரோட்டத்தில் இரண்டறக் கலந்து வாழ்வதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

**மூத்த குடிமக்கள் நலன்**

54. முதுமை மானுட வாழ்வின் தவிர்க்க இயலாத கட்டமாகும். தனிமை, மருத்துவ நலன் மற்றும் பொருளாதாரச் சார்பு உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும் மூத்த குடிமக்களின் முழுமையான பராமரிப்பிற்கென, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாநகராட்சிகளில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 25 '**அன்புச்சோலை**' மையங்கள் அமைக்கப்படும். இந்தப் பகல்நேரப் பாதுகாப்பு மையங்களில் முதியவர்கள் தோழமை உணர்வுடனும் பயனுள்ள பணிகளிலும் ஈடுபடலாம். பகல்நேரப் பராமரிப்பு உதவி, அத்தியாவசிய மருத்துவப் பராமரிப்புக்கான ஏற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் துணையுடன் இந்த அன்புச்சோலைகள் வழங்கும்.

**குழந்தைகள் நலன்**

55. **பசிப்பிணி மருத்துவன் இல்லம்**

**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே.**

**(புறநானூறு – 173)**

சங்ககாலத்தைச் சேர்ந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால், பசிப்பிணியைப் போக்கிய மருத்துவராகப் போற்றப்படுகிறார். அம்மரபின் வழிவந்து, தமிழ்ச் சமூகத்தை வழிநடத்திய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையை அகற்றிடவும், மாணவர்களின் கல்வி நலன்களைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக, "**பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும் எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்**" என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை உள்வாங்கி அறிமுகப்படுத்தப்பட்ட '**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**' வாயிலாக, தமிழ்நாட்டிலுள்ள 30,992 அரசுப் பள்ளிகளிலும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 3,995 அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும்

17.53 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, அவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம், தமிழ்நாட்டின் நகரப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மேலும் 3.14 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், வரும் கல்வியாண்டு முதல் மேலும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

56. மேலும், குழந்தைகள் நல மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்திடும் வகையில், வரும் நிதியாண்டில் சுமார் 83 கோடி ரூபாய் செலவில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 500 குழந்தைகள் நல மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும். ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் 3,676 கோடி ரூபாய்

ஒதுக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 8,597 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

57. “**இன்றைய அரும்புகள், நாளைய மலர்கள்; இன்றைய மழலைகள், நாளைய நமது மரபு காக்கும் மாண்புறு செல்வங்கள்; அவர்களை வளமோடு வாழ வைப்பது அரசு, ஆடவர், பெண்டிர் இம்மூவரின் ஒத்துழைப்பின்பாற் பட்டதாகும்**”. - 1971-72 நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின் இந்த வாசகங்களை மனதில் இருத்தி, நமது அரசு பல முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும் தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களின் பெயரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2025-26 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் பொருட்டு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

58. உயர் தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், கற்றல், கற்பித்தல் சூழலை நவீனமாக்கிட இந்த அரசு உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. 2025-26 ஆம் ஆண்டில் 2,000 பள்ளிகளுக்கு 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினி ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயின்று வரும் பள்ளிகளில் உள்ள 880 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும். மேலும், அரசுப் பள்ளிகளில், 2025-26 ஆம் ஆண்டில் 2,676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

59. 2025-26 ஆம் ஆண்டில் 1,721 முதுகலை ஆசிரியர்களும் 841 பட்டதாரி ஆசிரியர்களும் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கான தேர்வு அறிவிக்கையை ஆசிரியர் தேர்வு வாரியம் விரைவில் வெளியிடும்.

60. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் உயர்ந்த நோக்கத்தோடு உயர்கல்வி குறித்த விழிப்புணர்வும், சிறப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 780 அரசுப் பள்ளி மாணவர்கள் இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), தேசிய சட்டப் பல்கலைக்கழகம் (NLU) உள்ளிட்ட, நாட்டின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சிறப்பிடம் பெற்று சேர்க்கை பெற்றுள்ளனர். மேலும், 12 மாணவர்கள் முழுக் கல்வி உதவித்தொகையுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று வருகின்றனர்.

61. இதன் அடுத்தகட்டமாக, 20 வகையான கல்விப் பிரிவுகளில் 350-க்கும் மேற்பட்ட பல்வேறு அகில இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்வி உதவித்தொகையுடன் கூடிய பட்டப் படிப்பு வாய்ப்புகள் குறித்தான விழிப்புணர்வு, '**நான் முதல்வன்-கல்லூரிக் கனவு**' திட்டம் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் சென்றடைய முயற்சிகள் எடுக்கப்படும். முதற்கட்டமாக, மாநிலத்தின் அனைத்து 388 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள 500 அரசுப் பள்ளிகளில் உயர்கல்வி குறித்தான விழிப்புணர்வு மற்றும்

சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலம், இந்த 500 அரசுப் பள்ளிகள் மட்டுமன்றி, அருகில் அமைந்திருக்கும் இதர அரசுப் பள்ளி மாணவர்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது, 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்திடும் ஒரு இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் முதற்கட்டத்தில் பயனடைவார்கள். '**நான் முதல்வன்-கல்லூரிக் கனவு**' திட்டத்தின் மூலம், குறைந்தது 2,000 அரசுப் பள்ளி மாணவர்கள் இனி ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து சிகரம் தொடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென 50 கோடி ரூபாய் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது.

62. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் (Samagra Shiksha) கீழ், பல்வேறு மாணவர் நலன் சார்ந்த திட்டங்களை கடந்த 7 ஆண்டுகளாக மாநில அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மாணவர்களின் அடிப்படைக் கல்வியறிவை உறுதிசெய்யும் 'எண்ணும் எழுத்தும் திட்டம்', மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வி,

தொலைதூரக் குடியிருப்புகளிலிருந்து மாணவர்கள் பள்ளிகளுக்கு வந்து சென்றிட போக்குவரத்துப்படி, ஆசிரியர்களின் ஊதியம், மாணவர்களின் எதிர்காலத்தைச் செதுக்கிடும் உயர்கல்வி வழிகாட்டி, மாணவர்களின் தனித் திறன்கள் மிளிர்ந்திட கலைத் திருவிழா, கல்விச் சுற்றுலா, இணைய வசதி உள்ளிட்ட பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் என பல்வேறு திட்டங்கள் மாணவரின் கல்வி நலன் சார்ந்து தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

63. எனினும், இந்த ஆண்டு மும்மொழிக் கொள்கையை உள்ளடக்கிய ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையினை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாததால், ஏற்கெனவே ஒப்புதல் வழங்கிய நிலையிலும் 2,152 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு விடுவிக்காமல் வஞ்சித்துள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை விடுவிக்காவிட்டாலும், மாணவர் நலன் கருதி அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வி ஒரு துளியேனும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஆசிரியர்களின் ஊதியம்

உள்ளிட்ட அத்திட்டங்களுக்குரிய நிதியை மாநில அரசே தனது சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து விடுவித்துள்ளது.

64. நெருக்கடியான இந்தச் சூழலிலும், இரண்டாயிரம் கோடி ரூபாய் நிதியினை இழந்தாலும் இருமொழிக் கொள்கையினை விட்டுத்தர மாட்டோம் என கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று, தமிழ்நாட்டின் தன்மானம் காத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பின் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அணிவகுத்துள்ளனர். எத்தனை தடைகள் எதிர்வரினும் மன உறுதியோடு நம்மை வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவாய் திரண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளை நினைவு கூற விழைகிறேன்.

"**தமிழர்க்குத் தொண்டு செய்யும்**

**தமிழனுக்குத் தடை செய்யும்**

**நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்**."

65. தொலைதூர மலைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு, குறிப்பாக பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கும் நோக்கத்தோடு,

மாணவர்கள் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே உயர்கல்வியை தொடர்ந்து பயின்றிட அரசு தொடர்முயற்சிகளை எடுத்து வருகிறது. அந்த வகையில், தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் மற்றும் கல்வராயன் மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை உள்ளிட்ட இடங்களிலுள்ள தொலைதூர மலைப் பகுதிகளில் அமைந்துள்ள 14 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

66. தென் தமிழ்நாட்டின் அறிவாலயமாகத் திகழ்ந்திடும் மதுரை மாநகரில் உருவாக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு, இதுவரை 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாசகர்கள் வருகை புரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து, கோவை மற்றும் திருச்சியில் மாபெரும் நூலகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அறிவைப் பரவலாக்கிடும் முயற்சிகளின் அடுத்த கட்டமாக, சேலம், கடலூர் மற்றும் திருநெல்வேலியில் பொதுமக்கள், போட்டித் தேர்வு

எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக தலா ஒரு இலட்சம் புத்தகங்கள் மற்றும் மாநாட்டுக் கூட வசதிகளுடன் நூலகங்கள் அமைக்கப்படும்.

67. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 46,767 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர்கல்வி**

68. சோழமண்டலக் கடற்கரையினை நில அளவீடு செய்திடத் திட்டமிட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் தேவைக்கென நில அளவையர் பயிற்சி வழங்கிட, 231 ஆண்டுகளுக்கு முன் (1794), 12 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட மதராஸ் நில அளவையர் பள்ளி (Madras School of Survey), பின்னர் 1859 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரியாக உருப்பெற்றது வரை, கிண்டி பொறியியல் கல்லூரியின் பயணம் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. கடந்த 47 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் அண்ணா பல்கலைக்கழகம் நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டு மாணவர்களின் தொழில்நுட்பக்

கனவுகளின் சிகரமாய் விளங்கிடும் அண்ணா பல்கலைக்கழகத்தினை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களின் தர வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள்ளும், உலக அளவிலான QS தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள்ளும் இடம்பெறச் செய்திட உரிய செயல்திட்டம் வகுக்கப்படும்.

69. இத்திட்டத்தின் கீழ், திறன்மிகு வகுப்பறைகள், நவீன தொழில்நுட்ப ஆய்வகங்கள், புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், புத்தொழில் நிறுவனப் பூங்கா, வளர்ந்து வரும் துறைகளுக்கான ஆராய்ச்சி உதவி, மெய்நிகர் ஆய்வகங்கள் ஆகியவை முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையோடு அமைக்கப்படும். கற்றல் மற்றும் கற்பித்தல் அனுபவத்தை மேம்படுத்திட முன்னணி தொழில்நுட்ப நிபுணர்கள், வெளிநாட்டுப் பேராசிரியர்கள் மூன்று மாதங்கள் வரையிலான குறுகிய காலத்திற்கு சிறப்பு ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். முனைவர் பட்ட மற்றும் முது முனைவர் ஆய்வு மாணவர்களை ஊக்குவிக்க புதிய திட்டங்கள் வகுக்கப்படும். உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களுடன் இணைந்து,

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் இணைப் படிப்புகளை பயின்றிட வழிவகை உருவாக்கப்படும். நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிகள், தலைசிறந்த வீரர்களை உருவாக்கிட உகந்த விளையாட்டுச் சூழல், அனைத்து உயிரினங்களும் இணைந்து வாழும் பசுமைப்பரப்பு என அண்ணா பல்கலைக்கழகத்தை ஆசியாவின் தலை சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் இடம்பெறச் செய்திட உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திடும்.

70. இம்மாபெரும் கனவை நனவாக்கிட அரசு பங்களிப்பு, பல்கலைக்கழக நிதி மற்றும் முன்னாள் மாணவர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவற்றைக் கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

71. அரசுப் பல்கலைக்கழகங்களின் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் வண்ணம், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பு நிதி நல்கை 700 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், தமிழ்நாட்டில் செயல்படும்

அரசுப் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயல்பாடுகள், ஆராய்ச்சித் திறன் மேம்பாடு, ஆசிரியர்களுக்கான தொடர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு, தேர்வு முறை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் ஆகிய தளங்களில் உரிய முன்னேற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில் 200 கோடி ரூபாய் கொண்ட சிறப்புத் தொகுப்பு நிதியம் உருவாக்கப்படும்.

72. உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், தங்களது பொருட்களின் வடிவமைப்பு, மேம்பாடு, புத்தாக்கம் உள்ளிட்ட ஆராய்ச்சிகளை அரசு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துவதை ஊக்கப்படுத்திட, அரசு மானியம் வழங்கப்படும். இதற்கென, தொழில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிதியை உருவாக்கிட 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் தொழில் நிறுவனங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் இணைந்து செயலாற்றிட வாய்ப்பு உருவாக்கப்படும்.

73. தமிழ்நாட்டிலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில், வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இணையப் பாதுகாப்பு (Cyber Security), மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்பம் (Advanced Manufacturing Technology), எந்திரவியல் (Robotics), மின் வாகனத் தொழில்நுட்பம் (Electric Vehicle Technology) மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் (Environmental Engineering) உள்ளிட்ட வளர்ந்து வரும் துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் வரும் கல்வியாண்டு முதல் அறிமுகம் செய்யப்படும். இவ்வகை நவீன தொழில்நுட்பப் படிப்புகளை மாணவர்களுக்கு முறையாக அறிமுகம் செய்திட 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் (Centres of Excellence) முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கப்படும்.

74. அதேபோன்று, அரசு பலவகைத் (Polytechnic) தொழில்நுட்பக் கல்லூரிகளில் திறன்மிகு உற்பத்தி (Smart Manufacturing Technology), இணையப் பாதுகாப்பு

(Cyber Security and Networking), உணவுத் தொழில்நுட்பம் (Food Technology), புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பம் (Renewable Energy Technology), ஆளில்லா வான்கலம் வடிவமைப்பு (Drone Design and Application) ஆகிய துறைகளில் புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

75. தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி முறையில் மாணவர்கள் அதிகம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவுகளில் கூடுதலாக 15,000 இடங்கள் வரும் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும். இம்முயற்சிக்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் மனிதவளத்திற்கென 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

76. உயர்கல்விச் சேர்க்கை விகிதத்தைப் பொறுத்தவரை, நாட்டிற்கே முன்னோடியாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. அந்தச் சாதனை அளவை மேலும் உயர்த்திடும் வகையில், கல்லூரி மாணவர்களுக்குத் தரமான உயர்கல்வியினைத் தொடர்ந்து வழங்கிட இந்த அரசு பல

முன்முயற்சிகளை எடுத்து வருகிறது. பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள், நவீன ஆய்வகங்கள், மின் பதிப்புகள் கொண்ட நூலகங்கள், மாணவர் விடுதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 2025-26 ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

77. பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு கடந்த 2021-22 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அவர்களின் மொத்தக் கல்விச் செலவையும் முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ், பல்வேறு தொழிற்படிப்புகளில் தற்போது பயின்று வரும் 41,038 மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே

ஏற்றிடும் வகையில், வரும் நிதியாண்டிற்கு 550 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

78. புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முன்னோடித் திட்டங்களால் தமிழ்நாட்டில் மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்தேவைகளை நிறைவேற்றும் விதமாக, நீலகிரி மாவட்டம் குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சென்னை மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

79. மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை வளர்த்திடவும், இளைய தலைமுறையினருக்கு புதிய தொழில்நுட்ப வசதிகளைத் தொடர்ந்து அறிமுகம் செய்திடும் நோக்கோடு, சிங்கப்பூர் அறிவியல் மையத்துடன் இணைந்து

நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட சென்னை அறிவியல் மையம் உருவாக்கப்படும். இம்மையத்தில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் (STEM) புலங்கள் மட்டுமன்றி, விண்வெளி, வானவியல் துறைகளின் மெய்நிகர் மாதிரிகளும் இடம்பெற்றிருக்கும். குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா, நவீன வானவியல் தொலைநோக்கு வசதிகள், ஆழ்கடல் உயிரினங்கள் மற்றும் வானவியல் நகர்வுகளை ஆழ்ந்து உணரக்கூடிய டிஜிட்டல் திரை அனுபவ அரங்குகள், அறிவியல் மாநாட்டுக் கூடங்கள், பார்வையாளர்களுக்கான பசுமைப் புல்வெளிகள் என அனைத்து வசதிகளுடன் கூடிய பிரமாண்ட '**சென்னை அறிவியல் மையம்**' 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் அரசு பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

80. நாள்தோறும் மாறி வரும் தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், புத்தாக்கச் சிந்தனை, தொழில்துறை வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஆணிவேராகவும், அடித்தளமாகவும் இருப்பது அடிப்படை அறிவியல். காலநிலை மாற்றம், உலக வெப்பமயமாதல், புதுப்பிக்கத்தக்க மின்சக்தி சேமிப்புத் தேவை, உலகெங்கும்

பரவி வரும் நோய்க் கிருமிகள் என பல்வேறு சவால்கள் உருவாகி வருகின்றன. இவைகளுக்கான தீர்வுகளை நோக்கிய பயணத்தில், புதிய பார்வையுடன் அணுகும் அடிப்படை அறிவியல் ஆராய்ச்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

81. மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதைப் போன்று, அடிப்படை அறிவியல் மற்றும் கணித (Basic Sciences and Mathematics) ஆராய்ச்சிச் சூழலும் தமிழ்நாட்டில் மேம்பட வேண்டும் என்று கல்வியாளர்கள் கருதுவதை நமது அரசு கவனமாகப் பரிசீலித்து, தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோவையில் இரண்டு அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சி மையங்களை Indian Institute of Science, Tata Institute of Fundamental Research போன்ற, நாட்டின் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கிட 100 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். புகழ்பெற்ற அறிவியல் அறிஞர்களின் வழிகாட்டுதலுடன் முனைவர் மற்றும் முதுமுனைவர் பட்டப்படிப்பு மூலம் உயர் அறிவியல் ஆராய்ச்சிகள் மட்டுமின்றி, மாணவரிடையே ஆழமான

அறிவியல் மனப்பான்மையை உருவாக்கிடவும் இம்மையங்கள் முக்கியப் பங்காற்றிடும்.

82. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்கு 8,494 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நான் முதல்வன்**

83. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டம் உலகை வெல்லும் இளைஞர்களைத் தமிழ் மண்ணில் படைக்கும் உயரிய நோக்கம் கொண்டது. நாட்டின் பிற மாநிலங்களும் பின்பற்ற விழையும் இத்திட்டத்தில் இதுவரை சுமார் 41.38 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், 1 இலட்சம் ஆசிரியர்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற மாணவர்களில் 1.04 இலட்சம் மாணவர்கள் இதுவரை வேலைவாய்ப்பினை பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

84. ஒன்றிய குடிமைப் பணி தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்திட, ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு, அவர்கள் முதல்நிலை தேர்வுகளுக்கு தயாராகும் வகையில், 10 மாதங்களுக்கு, மாதம் 7,500 ரூபாயும், முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 25,000 ரூபாயும், ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து, முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்று நேர்முகத் தேர்விற்குத் தயாராகும் இளைஞர்களுக்கு 50,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப் படுத்தப்படும்.

85. நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள் என்ற உயரிய நோக்கத்துடன் பல முன்னோடித் திட்டங்களை நமது அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த வகையில், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடும் வகையில் கடந்த நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட '**தமிழ்ப் புதல்வன்**'

திட்டத்தில் 3.80 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

86. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு அவர்கள் தங்களுடைய பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாட்டிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித்தொகை அளிக்கும் வகையில் 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். தமிழ்நாட்டு மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கும் வகையில், தேவையின் அடிப்படையில் 2025-26 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு 2,500 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு வங்கிகள் கல்விக் கடன் வழங்குவதை இந்த அரசு உறுதி செய்திடும்.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு**

87. இந்தியாவிலேயே விளையாட்டுத் துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தும் நோக்கில் இந்த அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில், விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், விளையாட்டு வீரர்களின் நலனுக்காகவும் பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வென்ற 4,554 விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு இதுவரை 151 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ், இதுவரை 93 விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

88. 44வது செஸ் ஒலிம்பியாட்-2022, கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்-2023, தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப், ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை-2023 போன்ற பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு அரசால் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

89. இன்று உலக அரங்கில் சதுரங்க விளையாட்டின் தலைநகராகத் தமிழ்நாடு விளங்குகிறது. இதுவரை இரண்டு உலக சாம்பியன்கள் மற்றும் 31 கிராண்ட் மாஸ்டர்கள் தமிழ் மண்ணிலிருந்து உருவாகியுள்ளனர். இந்த வெற்றியைத்

தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும், மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டை ஊக்குவித்து பல சாம்பியன்களை எதிர்காலத்தில் உருவாக்கும் வகையிலும், பள்ளிப் பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டினைச் சேர்த்திடும் விதமாக, உடற்கல்விப் பாடத்திட்டம் உரிய வகையில் மாற்றியமைக்கப்படும்.

90. இந்தியாவின் மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் ஏராளமான இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள் மலையேற்ற விளையாட்டு ஆர்வலர்களுக்கு ஏற்றதாக உள்ளன. பயிற்சிபெற்ற மலையேற்ற வீரர்கள் இந்தியாவில் மட்டுமின்றி, உலகெங்கும் பயணம் செய்து சிகரம் தொட விழைகின்றனர். எனவே, பல்வேறு மலையேற்ற வீரர்களின் பெருங்கனவான, உலகில் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை புரியும் தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர் / வீராங்கனைகளுக்கு 10 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

91. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 572 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

92. திறன்மிக்க மனிதவளத்தை அதிகரித்திடவும், தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொழிற்பயிற்சி அளித்து இளைஞர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கும், திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை, புதுக்கோட்டை மாவட்டம் – ஏம்பல், காஞ்சிபுரம் மாவட்டம் – சாலவாக்கம், மயிலாடுதுறை மாவட்டம் – செம்பனார்கோவில், அரியலூர் மாவட்டம் தா.பழூர், இராமநாதபுரம் மாவட்டம் திருஉத்திரகோசமங்கை, திருச்சி மாவட்டம் மணப்பாறை, திருப்பூர் மாவட்டம் காங்கேயம், தென்காசி மாவட்டம் குறுக்கள்பட்டி, மற்றும் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஆகிய 10 இடங்களில் தலா 4 தொழிற்பிரிவுகள் கொண்ட புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 152 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு கூடுதலாக 1,308 மாணவ மாணவியர் பயிற்சி பெற்றுப் பயனடைவர்.

93. கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பெற்று அவர்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை

மாவட்டம் - திருப்பரங்குன்றம், திருச்சி மாவட்டம் – மண்ணச்சநல்லூர், கோயம்புத்தூர் மாவட்டம் – பேரூர் மற்றும் தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் ஆகிய கட்டுமானத் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் விடுதி வசதிகளுடன் கூடிய 7 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தலா 6 தொழிற் பிரிவுகளுடன் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியுதவியுடன் 148 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு கூடுதலாக 1,370 மாணவ மாணவியர் பயிற்சி பெற்றுப் பயனடைவர்.

94. கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு, தசைக்கூட்டு வலி பிரச்சினை (Musculo Skeletal Problem) உள்ளிட்ட பணி சார்ந்த நோய்களைக் கண்டறிந்து உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கும் வகையில், 40 வயதிற்கு மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்து மருத்துவப் பரிசோதனை அட்டை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 16.70 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைவர்.

95. வேகமாக வளர்ந்து வரும் இணையம் சார்ந்த பொருளாதாரச் சூழலில், இணையம் சார்ந்த சேவைப்பணிகளில் ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துவரும் நிலையில், இத்தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்கள் நலவாரியம் (Gig Workers Welfare Board) உருவாக்கப்பட்டது. இந்நலவாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 2,000 இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களுக்கு புதிதாக இருசக்கர மின் வாகனம் (e-Scooter) வாங்கும் பொருட்டு தலா 20,000 ரூபாய் மானியமாக வழங்கும் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

96. தமிழ்நாட்டில் உள்ள இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில், சுமார் 1.5 இலட்சம் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணம் மற்றும் இயலாமை இழப்பீட்டிற்கான குழு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். மேலும், இவ்வகை சேவைப்பணித் தொழிலாளர்களுக்கென அனைத்து

வசதிகளுடன் கூடிய ஓய்வுக்கூடங்கள், சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் உருவாக்கப்படும்.

97. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 1,975 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு**

98. நாட்டில் புற்றுநோயினால் பாதிப்படைபவர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. எனவே, தரமான புற்றுநோய் சிகிச்சை மற்றும் உரிய பராமரிப்பு சேவைகளை அனைவருக்கும் வழங்கிட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. இக்குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை மாநில அளவிலான முதன்மை புற்றுநோய் மையமாக அறிவிக்கப்பட்டது. அதனைத் தரம் உயர்த்தி, உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, நோய் ஆதரவு சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை 800 படுக்கைகளுடன் கூடிய, தன்னாட்சி பெற்ற மையமாகச்

செயல்படும் வகையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 120 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

99. நவீன நோய் கண்டறியும் முறைகளைக் கையாண்டு, ஆரம்ப நிலையிலேயே புற்றுநோய் கண்டறிதலை அறிமுகப்படுத்திட, இடைநிலை மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தேவையான நவீன மருத்துவக் கருவிகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றை 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த மூன்று ஆண்டுகளில் வழங்கிட அரசு திட்டமிட்டுள்ளது.

100. கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும், HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்துப் பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென, 2025-26 ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

101. மேலும், அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் அவர்களது வசிப்பிடங்களுக்கு அருகில் சென்று, நடமாடும்

மருத்துவக் குழுக்கள் மூலம், முக்கிய புற்றுநோய்கள் மற்றும் இருதய நோய் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான சோதனைகள் மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகிய பல்வேறு சேவைகளை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து வழங்கிட 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

102. பெருகிவரும் தொற்றாநோய்களின் பாதிப்புகளை எதிர்கொள்ளும் விதமாக 'மக்களைத் தேடி மருத்துவம்' எனும் மகத்தான திட்டத்தின் மூலம், பயனாளிகளின் இல்லங்களுக்கே சென்று, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இதுவரை 2 கோடியே 20 இலட்சம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்துவதில் முதன்மையான மற்றும் சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியதற்காக ஐ.நா. அமைப்பின் 2024 ஆண்டிற்கான **'United Nation Interagency Task Force Award'** என்ற விருது தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

103. சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திடும் வகையிலும், அதனால் ஏற்படும் மருத்துவச் செலவினைக் குறைத்திடும் நோக்கத்தோடு, நாட்டிற்கே முன்னோடியாகத் தொடங்கப்பட்ட '**இன்னுயிர் காப்போம் திட்டம் - நம்மைக் காக்கும் – 48**' எனும் திட்டத்தின் கீழ், 250 அரசு மருத்துவமனைகள், 473 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 723 மருத்துவமனைகள் மூலம் இதுவரை, 3,43,156 நபர்களுக்கு 302 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்களின் இன்னுயிர் காக்கப்பட்டுள்ளது.

104. தேசிய நலவாழ்வுக் குழுமம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு 2,754 கோடி ரூபாயும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு 1,092 கோடி ரூபாயும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு 1,461 கோடி ரூபாயும், அவசர ஊர்தி சேவைகளுக்கு 348 கோடி ரூபாயும், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 21,906 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்துறை**

105. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் தோல் பொருட்கள், தானியங்கி வாகனங்கள் மற்றும் வாகன உப பாகங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. நாட்டிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்தப் பெண் தொழிலாளர்களில் 41 சதவீதத்தினரை தன்னகத்தே கொண்ட சிறப்பையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, தொழில்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து வருகிறது.

106. தேசிய ஏற்றுமதியில் 33 சதவீத பங்களிப்புடன் இந்தியாவின் மிகப்பெரும் மின்னணுப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சூழல்கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. 2020-21 ஆம் ஆண்டில் 1.66 பில்லியன் டாலராக இருந்த மாநிலத்தின் மின்னணு ஏற்றுமதி, 2023-24 ஆம் ஆண்டில் 9.56 பில்லியன் டாலராக அதிவேக வளர்ச்சி அடைந்துள்ளது. மின்னணுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில்

தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை பெற்றிட பல முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது.

107. அதன் அடுத்தகட்டமாக, **தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம்-2030** எனும் ஐந்தாண்டுகாலத் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும். செமி கண்டக்டர் உயர்திறன் வடிவமைப்பு மற்றும் பரிசோதனை மையம் (Semi Conductor Fabless Lab) ஒன்று சென்னையில் முன்னணி தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். உலக அளவில் தலைசிறந்த செமி கண்டக்டர் வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டுப் புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் வடிவமைப்பு மையங்களை தமிழ்நாட்டில் அமைத்திட ஊக்கம் அளிக்கப்படும்.

108. பொறியியல் மற்றும் வார்ப்பகத் தொழிலில் சிறந்து விளங்கும் கோவை மண்டலத்தின், நவீனத் தொழில் அடையாளமாக எதிர்காலத்தில் விளங்கக்கூடிய வகையில், **கோவை-சூலூர் பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவிலும், பல்லடம்**

**அருகே 100 ஏக்கர் பரப்பளவிலும் செமி கண்டக்டர் உற்பத்திக்கான இயந்திரத் தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்படும்**. அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மற்றும் தைவானிய நிறுவனங்கள் இணைந்து அமைக்கவிருக்கும் இந்தத் தொழிற்பூங்காக்கள் கோவை மண்டலத்தின் பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்.

109. 25 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் டைடல் பூங்காவை அமைத்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு வித்திட்ட, நவீன தமிழ்நாட்டின் சிற்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த தகவல் நெடுஞ்சாலையில், தமிழ்நாட்டின் அனைத்து நகரங்களும் இணைந்து பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஓசூரில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உயர்தர அலுவலக வசதிகளைக் கொண்டு, 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றும், விருதுநகர் மாவட்டத்தில் புதிய மினி டைடல் பூங்கா ஒன்றும் அமைக்கப்படும். இதன்மூலம் 6,600 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

110. உலகளாவிய திறன் மையங்களை ஈர்ப்பதில் தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோவை மாநகரங்கள் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளன. அதைத் தொடர்ந்து, தொழில் வளர்ச்சியில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டு வரும் ஓசூர் நகரை, உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான ஒரு புதிய மையமாக நிலைநிறுத்துவதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், சென்னையில் பழைய மாமல்லபுரம் சாலையினை தகவல் தொழில்நுட்ப வழித்தடமாக சிறப்புடன் மாற்றி அமைத்ததைப் போன்று, ஓசூர் நகரத்தை ஒட்டி உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் **ஓசூர் அறிவுசார் பெருவழித்தடம் (Hosur Knowledge Corridor)** ஒன்று அமைக்கப்படும். உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்களை அங்கு அமைத்திடத் தேவையான அனைத்து வசதிகளும் இந்த வழித்தடத்தில் இடம் பெற்றிருக்கும்.

111. அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்கிட, பொருளாதார வளர்ச்சியை மாநிலத்தின் அனைத்துப்

பகுதிகளுக்கும் பரவலாகக் கொண்டு சேர்த்திட இந்தத் திராவிட மாடல் அரசு அயராது உழைத்து வருகிறது. அந்த உயரிய நோக்கத்தை நடைமுறைப்படுத்திடும் வகையில் கீழ்க்கண்ட தொழில் முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

- தோல் அல்லாத காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள, உலகின் முன்னணி நிறுவனங்கள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில், விழுப்புரம், இராணிப்பேட்டை, வேலூர், கள்ளக்குறிச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்ற தோல் அல்லாத காலணி உற்பத்தித் தொழிற்சாலைகளின் மூலம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன், அவர்களில் 80 சதவீதம் பேர் ஊரகப் பகுதிகளைச் சார்ந்த பெண்களாக இருப்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இத்துறையில், நாட்டிலேயே அதிக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திட்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

- இந்த உற்பத்தித் துறையில், இவ்வருடம் 10,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் மதுரை மாவட்டம்

மேலூரிலும், 10,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் கடலூரிலும், இரண்டு காலணி தொழிற்பூங்காக்கள் 250 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படும். மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காலணி திறன் பயிற்சி மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் நிறுவிடும்.

- மத்திய மண்டலத்தில் 5,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், திருச்சியில் 250 ஏக்கர் பரப்பளவில் பொறியியல் மற்றும் வார்ப்பகத் தொழிற்பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டம் ஏற்கெனவே பசுமை ஹைட்ரஜன் மற்றும் வாகன உற்பத்தித் துறையில் கணிசமான முதலீடுகளை ஈர்த்துள்ளது. அதைத் தொடர்ந்து, இம்மாவட்டத்தில் செயற்கை இழை மற்றும் தொழிநுட்ப ஜவுளித் தொழிற்பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- கடலூர் மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவிலும் புதிய தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும்.

- கோவை மாவட்டம் பம்பு மோட்டார் உற்பத்தி மற்றும் வார்ப்பகத் தொழிலில் நாட்டிலேயே சிறப்பிடம் பெற்றுள்ளது. அத்துறைகளின் அடுத்தகட்ட வளர்ச்சியை எதிர்நோக்கி உயர் தொழில்நுட்ப பம்பு மோட்டார் உற்பத்திக்கான உயர்திறன் மையம் ஒன்றும், வார்ப்பகத் தொழிலுக்கான உயர் திறன் மையம் (Centres of Excellence For Advanced Pump Motor Manufacturing and Foundry) ஒன்றும், தொழில் கூட்டமைப்பினரோடு இணைந்து டிட்கோ நிறுவனம் அமைக்கும்.

112. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விமான நிலையங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு, சென்னை, கோவை, மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்கு உரிய நிலங்களைக் கையகப்படுத்தி, 2,938 கோடி ரூபாய் மதிப்புள்ள

நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்கியுள்ளது. மேலும், சேலம் விமான நிலையத்திற்கென 350 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னைக்கு அருகே பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், தென் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி குன்றிய பகுதிகளின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காகவும், **இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் பகுதியில் புதிய விமான நிலையம் ஒன்று அமைக்கப்படும்**.

113. சங்க காலம் தொட்டு தமிழரின் கப்பல் கட்டும் வரலாறு நீண்ட நெடிய மரபைக் கொண்டது. தமிழரின் இத்தகைய கடல்சார் மரபை மீட்டெடுத்திடவும், தமிழ்நாட்டை உலகளாவிய கப்பல் கட்டும் மையமாக நிறுவிடவும், '**தமிழ்நாடு கடல் போக்குவரத்து உற்பத்திக் கொள்கை 2025**' ஒன்றை அரசு அறிமுகப்படுத்தும். கப்பல் மற்றும் படகு வடிவமைப்பு மற்றும் கப்பல் சட்டகம் கட்டுருவாக்கம் (Ship Hull Fabrication) மற்றும்

கப்பல் இயந்திர உற்பத்தி (Ship Engine Production) ஆகிய துறைகளில் முதலீடு மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கங்களைக் கொண்டு இப்புதிய கொள்கை அமைந்திடும். இந்தத் தொழிலின் வருகையின் மூலம், கடலூர் மற்றும் தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் 30,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை வளர்ச்சிக்கும் இக்கொள்கை வித்திடும்.

114. உயிரி தொழில்நுட்பத் துறையில் பல முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. உயிரி தொழில்நுட்ப சூழலமைப்பை ஊக்குவிப்பதற்காகவும், உயிரியல் மருந்து (Biosimilars) மற்றும் நோய் தீர்வியல் (Therapeutics) போன்ற வளர்ந்து வரும் துறைகளில் தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்தவும், அதிநவீன உயிர் அறிவியல் பூங்கா ஒன்று சென்னைக்கு அருகில் உருவாக்கப்படும். இதில் உலகத்தரம் வாய்ந்த, தரமான உட்கட்டமைப்பு வசதிகள், பொது சோதனை மையங்கள், ஆய்வகங்கள் மற்றும் இத்துறையின் உயர் மதிப்புக்கூட்டல் பொருட்களை உற்பத்தி செய்திடத் தேவையான

பிற முக்கிய தொழில்நுட்ப வசதிகளுடன் ஆயத்த உற்பத்திக் கூடங்கள் (Plug & Play) ஆகியவை அமைக்கப்படும்.

115. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு 3,915 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்**

116. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. பொறியியல் பொருட்கள், வாகன பாகங்கள், வார்ப்புகள், பம்புகள், ஆயத்த ஆடைகள், தோல் மற்றும் தோல் பொருட்கள் போன்ற பல தொழில்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இந்தியாவிலேயே, அதிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமையப்பெற்ற மாநிலங்களில், 32 இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுகளுடன் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. எதிர்வரும் 2025-26 ஆம் நிதியாண்டில் வங்கிகள் மூலம் 10 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 2.5 இலட்சம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும்.

117. மாநிலம் முழுவதும் உள்ள **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில், இந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம் - திருமுடிவாக்கம், விழுப்புரம் மாவட்டம்-சாரம் மற்றும் நாயனூர், கரூர் மாவட்டம்-நாகம்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்-தூரியூர், மதுரை மாவட்டம்-கருத்தபுளியம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்- தனிச்சியம், தஞ்சாவூர் மாவட்டம்- நடுவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம்-நரசிங்கநல்லூர்** ஆகிய 9 இடங்களில் மொத்தம் 398 ஏக்கர் பரப்பளவில் 366 கோடி ரூபாய் மொத்த திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டைகள் தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்றக் கழகத்தால் (SIDCO) உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 17,500 நபர்கள் வேலை வாய்ப்பினைப் பெறுவர்.

118. தேனி மாவட்டத்தில் நறுமணப் பொருட்கள், நாமக்கல் மாவட்டத்தில் முட்டை உணவு சார்ந்த பொருட்கள், இராமநாதபுரம் மாவட்டம்-பரமக்குடியில் மின்கடத்தி உபகரணங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கைவினைப் பொருட்கள் மற்றும் சென்னையில் பொறியியல் உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் குழுமங்களின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தி சந்தைப்படுத்திடவும்,

ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கிடவும் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் மற்றும் இதர வசதிகள் உருவாக்கப்படும்.

119. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் மூலதன மானியம் மற்றும் 6 சதவீதம் வட்டி மானியம் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை, 2,386 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்களுக்கு 259 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 170 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கலைஞர் கைவினைத் திட்டம்**

120. மரம் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள், நகை செய்தல், கண்ணாடி, மணி வேலைப்பாடுகள், இசைக்கருவிகள் தயாரித்தல் உள்ளிட்ட 25 வகையான தொழில்களில் கைவினைஞர்களுக்கு நிதியுதவி, திறன் பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் வழங்கிடும் நோக்கோடு, நமது அரசால் தொடங்கப்பட்டுள்ள '**கலைஞர் கைவினைத் திட்டம்**'

பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை 138 கோடி ரூபாய் கடனுதவி மற்றும் 28 கோடி ரூபாய் மானியம் பெறத்தக்க 7,297 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் சுமார் 19,000 கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில் மானிய நிதியாக 74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புத்தொழில் வளர்ச்சி**

121. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு உயர்ந்து, பத்தாயிரம் எண்ணிக்கையினைத் தாண்டி உயர்ந்து வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வெற்றிகரமான முன்னெடுப்புகளில் ஒன்றான '**தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டத்திற்கு**' 2025-26 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

122. தமிழ்நாட்டில் அண்மையில் உருவாக்கப்பட்ட விண்வெளித் தொழில்நுட்பம் சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் உலகளவில் தனி முத்திரை பதித்து வருகின்றன.

அவ்வகை விண்வெளித் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்திட '**விண்வெளித் தொழில்நுட்ப நிதியாக**' (Space Tech fund) 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், செயற்கைக்கோள் சோதனைகளுக்குத் தேவையான முன்மாதிரித் தயாரிப்பு ஆய்வகம், விண்வெளித் தரத்திற்கேற்ற பரிசோதனை வசதிகள், தொழில் வளர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வசதிகள் சென்னையில் அமைக்கப்படும்.

123. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 1,918 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முதல்வர் படைப்பகம்**

124. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான அறிவார்ந்த சூழலை ஏற்படுத்தவும், புத்தொழில் தொடங்குவோர் மற்றும் தொழில்முனைவோர் குறைந்த கட்டணத்தில் தங்கள் அலுவலகமாகவும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பகிர்ந்த பணியிடச் சேவை (Co-working space) வசதிகளை உள்ளடக்கி, சென்னை, கொளத்தூரில்

அமைக்கப்பட்ட '**முதல்வர் படைப்பகம்**' பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. போட்டித் தேர்வுகளுக்கான நூல்களுடன் கூடிய நூலகம், கட்டணமில்லா இணைய வசதி, குளிரூட்டப்பட்ட ஆலோசனைக் கூடங்கள் மற்றும் கணினி உள்ளிட்ட அலுவலகக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பகிர்ந்த பணியிடச் சேவை மூலம், புத்தொழில் முனைவோர், தகவல் தொழில்நுட்பப் பணியாளர் மற்றும் மாணவர்கள் பயன்பெறுவது மட்டுமன்றி, தங்கள் இல்லங்களுக்கு அருகிலேயே தேவையான நேரங்களில் பெண்களும் பணிபுரிந்திடும் பெரும் வாய்ப்பும் உருவாகும். '**முதல்வர் படைப்பகம் (CM Spaces)**' சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், தாம்பரம் மற்றும் ஆவடி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும், 30 இடங்களில், ஒரு மையம் தலா ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**தகவல் தொழில்நுட்பம்**

125. இயங்குபடம், காட்சிப்படுத்தல், விளையாட்டு, சித்திரக் கதைகள் மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (AVGC-XR) கொள்கை ஒன்று, துறைசார்ந்த வல்லுநர்களோடு இணைந்து உருவாக்கப்பட்டு வருகிறது. இத்துறையில் பெருமளவில்

உருவாகி வரும் புதிய தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, உயர்நுட்ப வேலைவாய்ப்புகளை தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஏற்படுத்திட வகை செய்யும் பொருட்டு, சென்னையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) வியன் (**Viyan**) **AVGC-XR Hub** எனும் பெயரில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். அதனைத் தொடர்ந்து, அதன் துணை மையங்கள் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் கல்வி நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து 3 ஆண்டுகளில் படிப்படியாக உருவாக்கப்படும்.

126. தகவல் தொழில்நுட்பத் துறையில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இணைய சேவைகள் மற்றும் தரவுக் கட்டமைப்புகளுக்காக பெருமளவில் மூலதனம் தேவைப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு iTNT மற்றும் தமிழ்நாடு புத்தொழில் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள புத்தொழில் நிறுவனங்கள் தரவு மைய சேவைகளை எளிதில் பெறும் பொருட்டு, தலா 5 இலட்சம் ரூபாய் மதிப்பு வரையிலான தரவு மைய சேவைகளுக்கான வில்லைகளை (Vouchers for Data Centre

Services) வழங்கிடும் திட்டம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் '**தமிழ்நாடு புத்தொழில் தரவு மைய சேவைத் திட்டம்**' என்ற பெயரில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

127. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு 131 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வளம்**

128. **நீரின்றி அமையாது உலகு** – தமிழ்நாட்டின் நீர்வளத்தினை பாதுகாத்து மேம்படுத்திடும் பொருட்டு, வரும் நிதியாண்டு முதல் '**ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டுத் திட்டம்**' (Comprehensive Water Resources Development Programme) 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்தல், புதிய நீர்ப்பாசனக் கட்டுமானங்களை அமைத்தல், ஏற்கனவே உள்ள நீர்ப்பாசனக் கட்டுமானங்களைப் புதுப்பித்தல், நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டங்கள், வெள்ளப் பாதுகாப்பு மற்றும் தணிப்புத் திட்டங்கள், அணைகளை மேலாண்மை செய்யும் திட்டங்கள், கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள் மட்டுமன்றி அனைத்து

நீர்நிலைகளையும் புனரமைத்து, மேம்படுத்தி உரிய முறையில் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

129. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர் ஆதாரங்கள் மற்றும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தில் கிடைக்கப்பெறும் குடிநீரைக் கொண்டு, சென்னை மாநகரத்தின் குடிநீர்த் தேவை நிறைவுசெய்யப்பட்டு வருகிறது. எனினும், சென்னையில் நாளுக்கு நாள் மக்கள்தொகை பெருகி வருவதாலும், மாறிவரும் பருவநிலை மாற்றத்தினால் அவ்வப்போது ஏற்படும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கவும், புதிய நீர்த்தேக்கங்களை அமைப்பது இன்றியமையாததாகும்.

130. இந்த வகையில் சென்னைக்கு அருகில் அமைந்துள்ள கோவளம் உப வடிநிலத்தில், பருவ காலங்களில் கிடைக்கும் வெள்ள நீரின் ஒரு பகுதியை செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் பழைய மாமல்லபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் 4,375 ஏக்கர் அரசு நிலப்பரப்பில், சுமார் 1.6 டி.எம்.சி. கொள்ளளவில் ஆண்டிற்கு 2.25 டி.எம்.சி. அளவிற்கு வெள்ள நீரினை சேமிக்கும்

வகையில், சென்னையின் ஆறாவது நீர்த்தேக்கமாக புதிய நீர்த்தேக்கம் ஒன்று 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கக்கூடிய 170 எம்.எல்.டி. குடிநீரைக் கொண்டு சென்னை பெருநகர மக்களின் குடிநீர்த் தேவை குறிப்பிடத்தக்க அளவில் நீண்ட காலத்திற்கு நிறைவு செய்யப்படும்.

131. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வளத் துறைக்கு 9,460 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பசுமை ஆற்றல்**

132. தமிழ்நாட்டினை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக உருவாக்கிட தற்போதைய மின் தேவை இரண்டு மடங்காக உயர்ந்திடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர் இலக்கினை அடையும் நோக்கில், வரும் 2030 ஆண்டிற்குள் 100 பில்லியன் யூனிட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை நமது மாநிலத்தில் உருவாக்கிட உரிய செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அந்த இலக்கை நோக்கிய பசுமைப் பயணத்தின் முதற்கட்டமாக வெள்ளிமலைப் பகுதியில்

1,100 மெகாவாட் திறன் மற்றும் ஆழியாறு பகுதியில் 1,800 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டங்கள் மொத்தம் 11,721 கோடி ரூபாய் முதலீட்டில் பொதுத்துறை - தனியார் பங்கேற்புடன் உருவாக்கப்படும்.

133. மேலும், சூரிய ஒளி நேரத்திற்குப் பின்னரும் நாள் முழுவதும் தூய்மையான புதுப்பிக்கப்பட்ட மின்சாரம் வழங்கும் நோக்கத்துடன், எதிர்வரும் 2025-26 ஆம் ஆண்டில் மட்டும், மணிக்கு 4,000 மெகாவாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்பு அமைப்புகள் (Battery Energy Storage System) உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

134. சூரிய மின்சக்தியை சேமித்து மாலை நேரங்களில் காணப்படும் உயர் மின் நுகர்வு நேரங்களில் தேவையான மின்சாரத்தை வழங்குவதன்மூலம், பெருமளவு செலவு குறைவதோடு கார்பன் நீக்கம் செய்து தூய்மையான மின்சக்தியையும் விநியோகிக்க வழிவகுக்கிறது. மேலும், ஏற்றுமதித் துறையில் பிற நாடுகளால் விதிக்கப்பட்ட கார்பன் சரி செய்தல் கட்டணங்களால் (Carbon Adjustment Tariff)

பாதிக்கப்படும் உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கு இத்தகைய சேமிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்சக்தி வழங்கப்படும்போது உலக அரங்கில் தமிழ்நாட்டின் தொழில் நிறுவனங்கள் முதன்மை பெற இயலும்.

135. மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள பல்வேறு கொள்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் வகையில் '**ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்கை**' (Integrated Renewable Energy Policy) வெளியிடப்படும்.

136. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 21,178 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காலநிலை மாற்றம்**

137. தமிழ்நாடு, 1,076 கிமீ நீண்ட நெடிய கடற்கரையுடன், அலையாத்திக்காடுகள், பவளப்பாறைகள் மற்றும் கடல் புற்கள் போன்ற வளமான கடல் சூழல் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இச்சூழல் அமைப்புகள் கடலோரச் சமூகங்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குவது

மட்டுமின்றி கடல் அரிப்பு மற்றும் கடல் மட்டம் உயர்வு ஆகியவற்றிற்கு எதிரான இயற்கை அரண்களாகவும் செயல்படுகின்றன. இம்முக்கிய வளங்களைப் பாதுகாத்திட வேண்டியது நமது தலையாய கடமை என்பதை உணர்ந்து, அலையாத்திக் காடுகள் பாதுகாப்பு, நவீன மீன்பிடி நடைமுறைகள் அறிமுகம் போன்ற முக்கியப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், '**கடல்சார் வள அறக்கட்டளை**' (Marine Resource Foundation) ஒன்று 50 கோடி ரூபாய் தொடக்க நிதியுடன் உருவாக்கப்படும்.

138. கடல் நீரின் தரம், சுற்றுச்சூழல் கல்வி, பொது சுற்றுச்சூழல் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் சேவைகள் ஆகிய நான்கு பெரும் பிரிவுகளின் கீழ் உள்ள 33 வெவ்வேறு தகுதிகளைக் கொண்டிருக்கும் கடற்கரைகளுக்கு வழங்கப்படும் நீலக்கொடி சான்றினை 2025-26 ஆம் ஆண்டில் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் உள்ள திருவான்மியூர், பாலவாக்கம், உத்தண்டி, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப் பட்டினம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கீழ்ப்புதுப்பட்டு மற்றும் கடலூர்

மாவட்டத்தில் உள்ள சாமியார்பேட்டை ஆகிய 6 கடற்கரைகள் பெற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

139. காற்று மாசுபாட்டையும் கார்பன் தடங்களையும் குறைத்திடும் நோக்கில், மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் 700 டீசல் பேருந்துகளை இயற்கை எரிவாயு மூலம் (CNG) இயங்கும் பேருந்துகளாக மறுசீரமைப்பு செய்திட தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய நிதியைக் கொண்டு 70 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

140. கழுகுகள், பருந்துகள் மற்றும் வல்லூறுகள் உள்ளிட்ட வேட்டையாடும் பறவைகள் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாப்பதால், பல்லுயிர்ப் பெருக்கத்தினை உறுதி செய்திடும் குறியீடாக வேட்டைப் பறவைகளின் இருப்பினை சூழலியலாளர்கள் கருதுகின்றனர். தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, திருநெல்வேலி, மதுரை அரிட்டாப்பட்டி மற்றும் பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் காணப்படும் இவ்வகை வேட்டைப் பறவைகள், அண்மைக் காலமாக வாழிடச் சிதைவு, நச்சுப் பொருட்களின் பரவல் ஆகியவற்றின் காரணமாக பெரும் வாழ்வியல் சிக்கலை

எதிர்கொண்டு வருகின்றன. எனவே, வேட்டைப் பறவைகளின் வாழிடங்களைப் பாதுகாத்திட உரிய திட்டங்களை தீட்டவும், உள்ளூர் மக்களிடம் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் '**வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி அமைப்பு**' ஒன்று அழிந்து வரும் உயிரினங்கள் பாதுகாப்பு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் நிதியினைக் கொண்டு உருவாக்கப்படும்.

141. தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவின் முனையில் அமைந்துள்ள தனுஷ்கோடிப் பகுதி, மணல் திட்டுகள், சதுப்பு நிலங்கள் மற்றும் சதுப்புநிலக் காடுகள் உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளின் தாயகமாகவும், பூநாரை உள்ளிட்ட வலசைப் பறவைகள் இடம்பெயர்வதற்கான மத்திய ஆசிய பறக்கும் பாதையின் முக்கியப் பகுதியாகவும் கருதப்படுகிறது. எனவே, புலம்பெயர்ந்த ஈரநிலப் பறவைகளுக்கான வலசைப் பாதையாக விளங்கி, பல்லுயிர்ச் சமநிலையைப் பாதுகாக்கும் வகையில், தனுஷ்கோடிப் பகுதியை, பூநாரை பறவைகள் சரணாலயமாக அறிவித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

142. திருவண்ணாமலை மாவட்டத்தின் செங்கம் நிலப்பரப்பு, அதன் வரலாறு மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்திற்குப் பெயர் பெற்றது. சங்ககால இலக்கியங்களிலேயே கொண்டாடப்பட்டு, நாளடைவில் வாழ்விடச் சிதைவுக்கு உள்ளான இப்பகுதியின் வனச் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுக்கும் வகையில், சுமார் 1,000 ஹெக்டேர் பரப்பளவில், அழிந்து வரும் தமிழ் நிலப்பரப்புக்கு உரிய மர இன வகைகளின் பாதுகாப்பையும், சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்கக்கூடிய ஒரு பல்லுயிர்ப் பூங்கா, மேல்செங்கம் பகுதியில் நிறுவப்படும். இப்பூங்காவில் பசுமைப் பரப்பு மட்டுமன்றி இயற்கைச் சுற்றுலா வசதிகளும் இடம் பெறும். முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி இம்முயற்சிக்காக வழங்கப்படும்.

143. தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் அமைந்திருக்கும் சாலைகளை தொடர்ந்து முறையாக பராமரிப்பது மூலம் வன மேலாண்மை மேம்படுவதுடன், தொலைதூர மலைப் பகுதியில் வாழும் மக்கள், குறிப்பாக பழங்குடியினர் பெரிதும் பயன்பெறுவர். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு, 2025-26 ஆம் ஆண்டு

500 கிலோ மீட்டர் நீளமுள்ள வனப் பகுதிச் சாலைகள் பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**போக்குவரத்துத் துறை**

144. தமிழ்நாட்டில் கடைக்கோடி குக்கிராமங்களுக்கும் தேவையான, தரமான மற்றும் நம்பகத்தன்மை கொண்ட போக்குவரத்து சேவையினை தொடர்ந்து வழங்கிட இந்த அரசு உரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக வரும் நிதியாண்டில் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட 1,031 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பயன்பாட்டிற்கு உகந்த 750 பேருந்துகளை முற்றிலும் புதுப்பித்து இயக்குவதற்காக 120 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

145. பெருநகரங்களில் காணப்படும் காற்று மாசுபாட்டினைக் குறைத்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னை மாநகரத்திற்கு 950 மின் பேருந்துகள், கோயம்புத்தூர் மாநகரத்திற்கு 75 மின் பேருந்துகள், மதுரை மாநகரத்திற்கு 100 மின் பேருந்துகள் என, மொத்தம்

1,125 மின் பேருந்துகள் உலக வங்கி மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கிக் கடனுதவியுடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

146. பெருகி வரும் நகரமயமாதலில் மிக முக்கியமான தேவையாக பேருந்து, புறநகர் இரயில்வே மற்றும் மெட்ரோ இரயில் போக்குவரத்து போன்ற பல்வேறு வசதிகளை ஒருங்கிணைக்கும் முனையங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அந்த வகையில் இவற்றை ஒன்றிணைக்கும் பன்முகப் போக்குவரத்து முனையம் ஒன்று, கிண்டியில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பயணியருக்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளுடன் ஏற்படுத்தப்படும். சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியிலும் இதேபோன்று பன்முகப் போக்குவரத்து முனையம் ஒன்று, நவீன பயணியர் வசதிகளுடன் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

147. கடந்த 1997-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய சிற்றுந்து (Mini Bus) திட்டம் தமிழ்நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நகர்ப்புரங்களை ஒட்டிய ஊரகப்

பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவையை வழங்கிடும் வகையில், மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் சுமார் 2,000 வழித்தடங்களில் சிற்றுந்துத் திட்டம் தமிழ்நாட்டில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

148. போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறன், சேவை வழங்கல் மற்றும் நிதி நிலையை மேம்படுத்துவதற்காக, போக்குவரத்துக் கழகங்களுக்கு செயல்பாட்டின் அடிப்படையிலான ஊக்கத் தொகை வழங்குவதற்காக, 2,000 கோடி ரூபாய் தொகையுடன் ஊக்க நிதியம் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். மேலும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சேவையினை மேம்படுத்தும் வகையில், சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் செயல்திறன் இடைவெளி நிதியாக 646 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

149. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மகளிர் விடியல் பயணத் திட்டத்திற்கான 3,600 கோடி ரூபாய், மாணவர்களுக்கான பேருந்துக் கட்டண மானியத்திற்காக 1,782 கோடி ரூபாய், டீசல் மானியத்திற்காக 1,857 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்கு 12,964 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மெட்ரோ இரயில் திட்டங்கள்**

150. தற்போது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் திட்டங்களிலேயே மிகப்பெரிய திட்டமாக 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 119 கி.மீ. தூரத்திற்கு மூன்று வழித்தடங்களில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இவ்வழித்தடங்களில், பூந்தமல்லி முதல் போரூர் வரையிலான உயர் வழித்தடம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

151. கோவை மாநகரில் அவினாசி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலை வழித்தடங்களில் 10,740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாநகரில் திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைக்கும் விதமாக 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மெட்ரோ இரயில் திட்டத்திற்கென தயாரிக்கப்பட்ட

விரிவான திட்ட அறிக்கைகள் ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்பு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இந்த இரு நகரங்களிலும் மெட்ரோ இரயில் அமைக்கப்படுவதற்கான பணி தொடங்கப்படும்.

152. மேலும், சென்னை மெட்ரோ இரயில் வழித்தடத்தை சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கத்திலுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரையிலான 15.46 கி.மீ. தூரத்திற்கு 9,335 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்பேடு முதல் ஆவடி வழியாக பட்டாபிராம் வரையிலான 21.76 கி.மீ. தூரத்திற்கு 9,744 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பூந்தமல்லியிலிருந்து திருப்பெரும்புதூர் வழியாக சுங்குவார்சத்திரம் வரையிலான 27.9 கி.மீ. தூரத்திற்கு 8,779 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நீட்டித்திடும் வகையில், விரிவான திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவ்விரிவான திட்ட அறிக்கைகள் ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்பினைப் பெறுவதற்காக விரைவில் அனுப்பப்படும்.

153. இதனைத் தொடர்ந்து, தாம்பரம் முதல் வேளச்சேரி வழியாக கிண்டி வரை 21 கி.மீ. தூரத்திற்கும், கலங்கரை விளக்கத்திலிருந்து உயர் நீதிமன்றம் வரை 6 கி.மீ. தூரத்திற்கும் மெட்ரோ இரயில் வழித்தடம் நீட்டிப்பு செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

154. தமிழ்நாட்டில் ஏற்பட்டு வரும் பரவலான பொருளாதார வளர்ச்சி மற்றும் விரிவான நகரமயமாக்கலைக் கருத்தில் கொண்டு, தலைநகர் புதுதில்லி - மீரட் நகரங்களுக்கிடையே மித அதிவேக இரயில் போக்குவரத்தை உருவாக்கி இயக்கப்படுவதைப் போன்று, '**மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பு**' (Regional Rapid Transit System – RRTS) ஒன்றினை தமிழ்நாட்டிலும் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் இயங்கும் மித அதிவேக இரயில்வே (Semi High Speed Railway) அமைப்பினை பின்வரும் வழித்தடங்களில் உருவாக்கிட, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

1) **சென்னை – செங்கல்பட்டு – திண்டிவனம் - விழுப்புரம்** (167 கி.மீ.)

2) **சென்னை – காஞ்சிபுரம் - வேலூர்** (140 கி.மீ.)

3) **கோயம்புத்தூர் – திருப்பூர் – ஈரோடு – சேலம்** (185 கி.மீ.)

155. மேலும், மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் அப்பகுதிகளில் நிலவும் நுண்ணிய சுற்றுச்சூழல் தன்மையை கருத்தில் கொண்டும் ரோப்வே (Ropeway) எனும் உயர் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

156. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில்முனைவோராக உயர்த்துவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான '**முதலமைச்சரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**' (CM ARISE) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் நிதியாண்டில், 122 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு 50 கோடி ரூபாய் மானியமாக

வழங்கப்பட்டு, இதுவரை 2,308 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். வரும் ஆண்டிற்கென 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

157. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர, '**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்**' செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மட்டுமல்லாமல், 120 கிராம அறிவுசார் மையங்கள் 117 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட 280 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

158. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உலகளாவிய கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த மாநில அரசு உறுதியாகச் செயல்பட்டு வருகிறது. கலை, அறிவியல், வணிகம், சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில்

முதுநிலை அல்லது ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடரும் மாணவர்களின் நிதிச் சுமையைக் குறைத்து. திறமையான மாணவர்கள் உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க, '**அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்**' கீழ், 2025-26 ஆம் நிதியாண்டில், 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

159. இவ்வரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக உயர்த்த, '**நன்னிலம்**' மகளிர் நிலவுடைமைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பையும், சமூக நிலையில் அவர்களின் உயர்வை உறுதிசெய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், 2025-26 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

160. தமிழ்நாட்டில் 37 வகை தொல்குடியினர் தனிச்சிறப்பு மிக்க அடையாளத்துடன் கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி

மலைகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக ஆண்டொன்றிற்கு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், நான்கு ஆண்டுகளுக்கு 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் '**தொல்குடித் திட்டம்**' உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் மரபுசார் அறிவினைப் பாதுகாத்து, பயன்படுத்தி, பல்லுயிர்ப் பெருக்கத்தோடு கூடிய '**பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கை**' ஒன்று உருவாக்கப்படும். முதற்கட்டமாக, ஈரோடு மாவட்டம் பர்கூர், கடம்பூர் மலைப்பகுதிகள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதிகளில் அரசின் நலத் திட்டங்களை ஒருங்கிணைத்து, பழங்குடி மக்களுக்கு திட்டப் பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதோடு, அப்பகுதிகளுக்கேற்ற சிறப்புத் திட்டங்களையும் நிறைவேற்றிட. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

161. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்குவதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில்

733 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 3,924 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நல்லிணக்க ஊராட்சி விருது**

162. சாதிப் பாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையினையும் கடைபிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து கௌரவிக்கும் வகையில், தகுதி படைத்த 10 ஊராட்சிகளுக்கு தலா 1 கோடி ரூபாய் ஊக்கத்தொகையுடன் கூடிய, சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள் வழங்கப்படும். உரிய செயல்திறன் அளவீடுகள் மற்றும் நல்லிணக்கத் தரவுகள் மூலம் இந்த ஊராட்சிகள் தேர்வு செய்யப்படும்.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

163. சமூகநீதியின் பிறப்பிடமான தமிழ்நாட்டில், நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. வரும் தேசிய மக்கள்தொகை

கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினையும் இணைத்து ஒன்றிய அரசு நடத்திட வேண்டும் என்று இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

164. அதிகமான மாணவர் சேர்க்கையுள்ள 27 கல்லூரி மாணவர் விடுதிகள் மற்றும் கடந்த 4 ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 36 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி மாணவர்கள் விடுதிகள் அடுத்த 2 ஆண்டுகளில் கட்டமைப்பு வசதி மேம்பாடு, சிறப்பு பழுது நீக்கம், புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரம் உயர்த்தி புதுப்பொலிவுடன் திகழ புதிய திட்டம் வகுக்கப்படும்.

165. 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் 2,92,261 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கத் தேவைப்படும் தொகை 117 கோடி ரூபாய். எனினும், ஒன்றிய அரசு இந்த நிதியாண்டில் வழங்கிய 19 கோடி ரூபாய் தொகை மூலம் மிகவும் குறைவான மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை

வழங்க இயலும் என்பதால் மீதமுள்ள மாணவர்களுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து கூடுதலாக 98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்வி பயில்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிப் படிப்பு உதவித்தொகை வழங்குவதற்காக 146 கோடி ரூபாயும், பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை வழங்குவதற்காக 335 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**சிறுபான்மையினர் நலன்**

166. சிறுபான்மையினரின் சமூக பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கென தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை, 159 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை நிலைச் சான்றிதழ் வழங்கப்பட்டது மட்டுமன்றி, இவற்றுள் 103 கல்வி நிறுவனங்கள் நிரந்தரச் சான்றிதழும் பெற்றுள்ளன. ஒன்றிய அரசு, சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கி வந்த கல்வி உதவித்தொகையினை கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டாலும். தமிழ்நாடு அரசு

வஃக்பு வாரியத்திற்கு வழங்கிய 12 கோடி ரூபாய் நிதியைக் கொண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் சிறுபான்மையின மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

167. பழமை வாய்ந்த பள்ளிவாசல்களையும், தர்காக்களையும் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் வரும் நிதியாண்டில் 10 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். அதேபோன்று, பழமையான தேவாலயங்களைப் பழுதுபார்ப்பதற்கும், சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு பத்து கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,563 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

168. மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சமூகப் பாதுகாப்பு அளித்தல், சிறப்புக் கல்வி, தொழிற்பயிற்சி அளித்தல், சுயவேலைவாய்ப்பு அளித்தல், உதவி உபகரணங்கள் வழங்குதல்,

தடையற்ற சூழல் அமைத்தல் மற்றும் சிறப்புப் பள்ளிகள், இல்லங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

169. அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 4 சதவீத இடஒதுக்கீடு மூலம், கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 1,493 மாற்றுத்திறனாளிகள் அரசுப் பணியைப் பெற்றுள்ளனர். அதே போன்று மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்துவதை தனியார் துறைகளிலும் ஊக்குவிக்கும் பொருட்டு தனியார் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 10 மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்தி இருந்தால், அத்தகைய நிறுவனங்களுக்கு மாதந்தோறும் ஒரு நபருக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் ஊதிய மானியத்தினை ஒரு ஆண்டிற்கு அரசு வழங்கும்.

170. உலக வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின்

உரிமைத் திட்டத்தின் (RIGHTS) மூலம், 2024-25 ஆம் நிதியாண்டில் 5 மாவட்டங்களில் முதற்கட்டமாக 10 வருவாய்க் கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையங்களும், 38 வட்டார அளவிலான சேவை மையங்களும் தொடங்கப் பெற்று, மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில், ஆறு வகையான மறுவாழ்வு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில், 2025-26 ஆம் ஆண்டில், 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அனைத்து மாவட்டங்களிலும் 82 வருவாய்க் கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையங்களும் 400 வட்டார அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையங்களும் ஏற்படுத்தப்படும்.

171. மாற்றுத்திறனாளிகள் தற்சார்புடன் இயல்புநிலைக்கு நிகரான செயல்பாடுகளை மேற்கொள்ள உதவும் வகையில், உயர் தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்ட திறன்மிகு கண்ணாடிகள் (Smart Vision Glasses), அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான கற்பிக்கும் உபகரணப் பெட்டகம் (TLM Kit), நிற்க இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் நவீன உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன கருவிகள்

அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கு ஏற்ப வழங்கும் திட்டம் 125 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேலும் செம்மைப்படுத்தும்.

172. மாநிலத்திலுள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிடும் வகையில், நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில் தக்க சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிப்பது மட்டுமன்றி, அவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை வழிநடத்தும் வல்லமை பெற்றவர்களாகவும் திகழ்வார்கள்.

173. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு 1,433 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்**

174. **“பூவிதழ் எங்கும் பனித்துளிகள்**

**காற்றசைவில் வீழ்ந்திடாமல்...**

**மெல்ல அசைந்தாடும் மணப்புல் மலர்கள்”**

- மட்சுவோ பாஷோ

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற ஜப்பானிய ஹைக்கூ கவிஞர் மட்சுவோ பாஷோவின் அழகியல் ததும்பும் இக்கவிதை வரிகள், இயற்கையின் படைப்புகளுக்கு இடையே காணப்படும் ஆழமான பிணைப்பை மனிதர்களுக்கு உணர்த்திச் செல்கிறது. இயற்கையினையும் உள்ளடக்கிய உலக உடன்பிறப்பு நேயத்தை உள்வாங்கி உருவாக்கப்பட்டதுதான் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம். இத்திட்டத்தின் கீழ், தற்போது மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அரசு முடிவு செய்துள்ளது. ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள்

உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி அரசு நலத்திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

175. முதற்கட்டமாக, மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50,000 குடும்பங்களில், குழந்தைகள் தங்களின் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. தாயுமானவரின் கரங்கள் இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியை தொடர, மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**இந்து சமய அறநிலையத்துறை**

176. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல், கடந்த நான்கு ஆண்டுகளில் 2,662 திருக்கோவில்களில் திருப்பணிகள்

நிறைவு பெற்று குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 777 திருக்கோவில்களில் நடைபெறும் அன்னதானம் வழங்கும் திட்டத்தின் கீழ் தினந்தோறும் சராசரியாக ஒரு இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். திருக்கோவில் சொத்துகளையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு எடுத்த பெருமுயற்சிகளின் பயனாக, 7,327 ஏக்கர் நிலங்களும், 36.38 இலட்சம் சதுர அடி மனைகளும், 5.98 இலட்சம் சதுர அடி கட்டடங்களும் திருக்கோவில் வசமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு 7,185 கோடி ரூபாய் ஆகும்.

177. மேலும், 84 திருக்கோவில்களில் உள்ள திருக்குளங்களைச் சீரமைக்க 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்துசமய அறநிலையத் துறையின் பதிப்பகத் துறை மூலமாக 216 க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. 2025-26 ஆம் நிதியாண்டில், ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்திட 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

178. ஒரு டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார இலக்கை தமிழ்நாடு அடைவதற்கான பதினெட்டு முன்னுரிமைத் துறைகளில் ஒன்றாக சுற்றுலாத் துறையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் சுற்றுலாத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கவும், சுற்றுலாத் துறையில் ஈடுபடும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், '**தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு வசதிச் சட்டம்**' ஒன்றினை நமது அரசு கொண்டு வரும்.

179. ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்திடும் முக்கிய நகரங்களான மாமல்லபுரம், திருவண்ணாமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், பழனி மற்றும் நாகூர் – வேளாங்கண்ணி பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் உரிய கட்டமைப்பு வசதிகளை நவீன தரத்துடன் அமைத்திடும் நோக்கோடு மொத்தம் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக மேற்கொள்ளப்படும்

இப்பணிகளை ஒருங்கிணைத்து முறையாகச் செயல்படுத்திட, இந்த நகரங்களுக்கென தனித்தனியே வளர்ச்சி ஆணையங்கள் உருவாக்கிட வேண்டிய தேவை எழுந்துள்ளது. முதற்கட்டமாக, மாமல்லபுரம், திருவண்ணாமலை, திருச்செந்தூர் மற்றும் இராமேஸ்வரம் நகரங்களுக்கென அத்தகைய வளர்ச்சி ஆணையங்கள் உருவாக்கப்படும். மேலும், மாநிலத்திலுள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பொருட்டு, அப்பகுதிகளில் சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

180. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தின் மையப் பகுதியில் சுமார் 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் பகுதியில் ஓர் எழில்மிகு சுற்றுச்சூழல் பூங்கா 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், நீலமலையின் இயற்கைச் சூழலுக்கு இணங்க நறுமணப் பொருட்கள் தோட்டம், நகர்ப்புர வனவியல் மற்றும் பறவைகள் காட்சிப் பகுதிகள், இயற்கை வழிப்பாதைகள் ஆகியவை இடம் பெறும்.

181. சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவித்திடும் பொருட்டு, மாமல்லபுரம்-மரக்காணம் வரையிலான கடலோரச் சுற்றுலா வழித்தடம், திருச்சி-தஞ்சாவூர்-நாகை சோழர்காலச் சுற்றுலா வழித்தடம், மதுரை-சிவகங்கை மரபுசார் சுற்றுலா வழித்தடம், கோவை-பொள்ளாச்சி வரையிலான இயற்கை நலன் சுற்றுலா வழித்தடம் உள்ளிட்ட முக்கியப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அங்கு சுற்றுலா வளர்ச்சிக்கு பொதுத்துறை மற்றும் தனியார் துறை முதலீடுகளை ஈர்த்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கால்நடை பராமரிப்பு**

182. நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியப் பங்காற்றி வரும் கால்நடை வளத்தை அதிகரிக்கவும் அதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக்க ஏதுவாகவும் '**கால்நடை இனப்பெருக்க கொள்கை**' (Bovine Breeding Policy) உருவாக்கப்படும். இதனைச் செயல்படுத்த விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு களப்பணியாளர்களின் பணி ஒருங்கிணைக்கப்பட்டு சீரான இனப் பெருக்கச் செயல்முறை நடைமுறைப்படுத்தப்படும்.

183. உரிமையாளர்கள் இல்லாத நாய்கள் (community dogs) மூலம் இதர கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் ஏற்படும் இன்னல்களை நீக்கிடும் விதமாக நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை (Animal Birth Control) செய்யும் வசதியை மேலும் வலுப்படுத்திட 100 கால்நடை மருத்துவமனைகளில் நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் கட்டமைப்புகள், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய மருத்துவ சேவை வசதிகள் (Post operative Care) 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். மேலும், தமிழ்நாடு விலங்கு நல வாரியத்திற்கு பல்வேறு பணிகளுக்காக வரும் நிதியாண்டில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

184. சமூக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கடலோர உள் கட்டமைப்புகளுக்கு, பருவ நிலை மாற்றங்களால் ஏற்படும் கடலரிப்பு போன்ற பாதிப்புகளை தணித்திடவும், புதிய திட்டங்களை வகுத்திடவும் உடனடி, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் (NCCR) மூலம் தமிழ்நாடு சுற்றுச்சூழல்

இயக்குநரகத்தின் ஒருங்கிணைப்புடன், கடலோர பாதுகாப்புடன் கூடிய மேம்பாட்டிற்கான ஆய்வு மேற்கொண்டு அதற்கான திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

185. மேலும், மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையில் கன்னியாகுமரி, நாகப்பட்டினம். தூத்துக்குடி, திருநெல்வேலி. இராமநாதபுரம், கடலூர், திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், விழுப்புரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் மீன் இறங்கு தளம், மீன்பிடி வலை பின்னுதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செயல்படுத்தப்படும்.

186. இலங்கை கடற்படையினரால் அதிகளவிலான தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கவும், இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மேலும், இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, இலங்கையில் நெடுங்காலமாக மீட்க இயலாத

நிலையில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளுக்கு நிவாரணத் தொகையை 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கான நிவாரணத் தொகையை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இலங்கை சிறையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 350 ரூபாய் தின உதவித்தொகை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

187. கடல் சீற்றங்கள், புயல் என இன்னல்கள் பல கடந்து வாழ்வைப் பணயம் வைத்து வாழ்வாதாரத்தைத் தேடும் மீனவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நம் மாநில அரசு, மீனவர்களுக்கு வழங்கப்படும் மானியங்களை தொடர்ந்து உயர்த்தி வந்துள்ளது. இந்த நிதியாண்டில் மீன் பிடிப்பு குறைவு மானியம் 1,79,147 மீனவர்களுக்குத் தலா 6,000 ரூபாய் வீதமும், மீன்பிடிப்புக் குறைவு காலத்திற்கென சேமித்து வைப்பதை ஊக்குவிக்க 2,10,850 மீனவர் மற்றும் 2,03,290 மீனவ மகளிருக்குத் தலா 3,000 ரூபாய் வீதமும், மீன்பிடி தடைக் காலத்தில், 1,98,923 மீனவர்களுக்கு ஒன்றிய அரசின் பங்களிப்பு 1,500 ரூபாயுடன் மாநில அரசின் கூடுதல் பங்களிப்பாக

6,500 ரூபாயும் சேர்த்து தலா 8,000 ரூபாய் வீதமும் என, மொத்தம் 381 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எரி எண்ணெய் (டீசல்) மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கிட இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 286 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பால் வளம்**

188. பால் மற்றும் பால் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு பொருளாதார பாதுகாப்பையும், நுகர்வோர்க்கு ஊட்டச்சத்தினை உறுதி செய்திடும் வகையில் பால்பண்ணைகள் தொடர்ந்து நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வண்ணம், சேலம் ஆவின் பால் பண்ணையில் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை 15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் பால்பண்ணை இயந்திரங்களை நவீன மயமாக்கலுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் பால்பண்ணைகளில் நவீன பால் அளவிடும் கருவிகள், நவீன பால் தகவல் சேகரிப்பான் மற்றும் நிலைகாட்டி

ஆகியவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நிறுவப்படும். மேலும், பால் பொருட்கள் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க 10 கோடி ரூபாய் செலவில், திருவண்ணாமலை மாவட்டத்தில் வெண்ணெய் மற்றும் பால் பவுடர் சிப்பமிடும் நவீன இயந்திரம் அமைக்கப்படும்.

**கைத்தறி மற்றும் துணிநூல்**

189. ஐந்து இலட்சம் விசைத் தறியாளர்களுக்கு வாழ்வளித்திடும் விசைத்தறித் துறையில் நாளுக்கு நாள் மாறி வரும் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்திட, **விசைத்தறி நவீனப்படுத்தும் திட்டம்** 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மூன்றாண்டு பழமையான சாதாரண விசைத்தறிகளை நவீன விசைத்தறிகளாக மேம்படுத்தி, உயர்மதிப்பு மிக்க துணிகளை உற்பத்தி செய்திட மூலதன மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 3,000 தறிகளை மேம்படுத்த 30 கோடி ரூபாயும், விசைத்தறிக் குழுமங்களில் தறிக் கூடங்கள், பொது வசதி மையம் மற்றும் ஏற்றுமதிக்கான தர ஆய்வுக் கூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்திட 20 கோடி ரூபாயும் வழங்கப்படும்.

190. கைத்தறித் தொழிலில் சந்தைத் தேவையை நிறைவு செய்தல், நெசவாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்குதலை உறுதி செய்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு கைத்தறி ஆதரவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி ஆதாரத்தினை வலுப்படுத்தும் நடைமுறை மூலதனத் தேவைக்கு கடனுதவி வழங்கிட கூடுதலாக 10 கோடி ரூபாய் திரள் நிதியாக வழங்கப்படும். மேலும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 673 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

191. ஆயத்த ஆடை மற்றும் வீட்டு உபயோக ஜவுளிகளை, ஏற்றுமதி தரத்திற்கேற்ப துல்லியமான முறையில் உற்பத்தி செய்திடவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டும், பொது வசதி மையங்களில், கணினிவழி வடிவமைப்பு மென்பொருளுடன் (CAD/CAM) கூடிய புதிய, முழுமையான கணினிமயமாக்கப்பட்ட துணி வெட்டும் இயந்திரங்கள் நிறுவிட, 50 சதவீதம் வரை மூலதன மானியம் வழங்கப்படும். இத்திட்டம், அடுத்த ஐந்தாண்டுகளில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

192. தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளிகளின் (Technical Textiles) உற்பத்தி மற்றும் அவற்றிற்கான முதலீடுகளை ஜவுளி நிறுவனங்கள் மேற்கொள்வதை ஊக்குவிக்கவும், '**தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி இயக்கம்**' (Tamil Nadu Technical Textile Mission) செயல்படுத்தப்படும். இதற்கென 15 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு 1,980 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி**

193. தமிழ்நாட்டில் எழில்மிகு இயற்கைச் சூழலுடன் கூடிய மலைப்பகுதிகளின் வளர்ச்சியை முறைப்படுத்திட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், நெல்லியாளம் பகுதிகள், கோவை மாவட்டத்தில் வால்பாறை, திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் சேலம் மாவட்டத்தில் ஏற்காடு ஆகிய பகுதிகளில் சுமார் 1,200 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மலைப் பகுதிகளுக்கான முழுமையான வளர்ச்சித்

திட்டங்கள் தயாரிக்கப்படும். சுற்றுலாத் தலங்களை அடையாளம் கண்டு, சுற்றுச்சூழல் பாதிப்பின்றி அவற்றை மேம்படுத்துதல், நிலச்சரிவு, வெள்ளம் மற்றும் இதர இயற்கைப் பேரிடர்களை திறமையாக எதிர்கொள்ளும் வகையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளுக்கு உரிய வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படும்.

194. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக, பழுதடைந்த நிலையில் உள்ள 6,424 குடியிருப்புகள் 1,148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, அடுத்த இரு ஆண்டுகளில், 5,256 குடியிருப்புகள் 1,051 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யப்படும். குறைந்த வருமானம் கொண்ட வகையினருக்கான வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்திடவும், தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகளை ஏற்படுத்திடவும் உதவிடும் வகையில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 7,718 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப் பணி**

195. மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கிண்டியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகியவற்றைத் தொடர்ந்து, சென்னையில் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு அரங்கம், தலைநகர் புதுதில்லியில் வைகை-தமிழ்நாடு இல்லம், கோவை மற்றும் திருச்சியில் நவீன வசதிகளுடன் கூடிய மாபெரும் நூலகங்கள் என தமிழ்நாட்டின் நவீன அடையாளங்கள் பலவற்றை அழகுற வடிவமைத்துக் கட்டமைக்கும் பணிகளை பொதுப்பணித் துறை மேற்கொண்டு வருகிறது.

196. புராதனக் கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் நோக்கோடு, சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் உள்ள கீழைக் கலையியல் ஆய்வு நிறுவன புராதனக் கட்டடம், இராணிப்பேட்டையில் உள்ள தேசிங்கு ராஜா ராணி நினைவகம், கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், திருச்சியில் இராணி மங்கம்மாள் கோட்டை வளாக அலுவலகங்கள், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் நகரில்

உள்ள மகாகவி பாரதியார் இல்லம் உள்ளிட்ட 17 புராதனக் கட்டடங்கள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

197. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பொதுப் பணித் துறைக்கு 2,457 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைகள்**

198. நாட்டிலேயே பரவலான சாலை வசதிகளைக் கொண்ட மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. இவ்வகை சாலை வசதிகளை மேலும் செம்மைப்படுத்திடும் நோக்கத்தில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 16,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2,130 கி.மீ. முக்கியச் சாலைகள் நான்குவழி மற்றும் இருவழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட்டுள்ளன. 5,000 கி.மீ.க்கும் அதிகமான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பிற மாவட்ட சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

199. அதன் தொடர்ச்சியாக, இவ்வாண்டு சென்னையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கையாளும் விதமாக, சென்னை நகரின் கிழக்குக் கடற்கரைச் சாலையில் திருவான்மியூரிலிருந்து உத்தண்டி பகுதி வரை 14.2 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை 2,100 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் (TANSHA) மூலம் அமைக்கப்படும்.

200. தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், அதிக வேலைவாய்ப்பை உருவாக்கவும், பல தொழில் வழித்தடங்களை உருவாக்கிட அரசு முனைந்துள்ளது. இந்த முன்னெடுப்பின் முதற்கட்டமாக, ஒரகடம்-செய்யார் தொழில் வழித்தடம் உருவாக்கப்படும். இதனால், செய்யார் தொழிற்பூங்காவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்த வழிவகை ஏற்படும். இதற்காக, 250 கோடி ரூபாய் மதிப்பில் முதற்கட்டப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

201. சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக புதிதாக

செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழியில் இருந்து திருக்கழுக்குன்றம் வழியாக கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள மாமல்லபுரம் வரை புதிய நான்குவழிச் சாலை சுமார் 28 கி.மீ. நீளத்திற்கு அமைத்திட சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

202. நகராட்சிகள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக, முக்கிய நகரங்களுக்கு புறவழிச்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன, அதன் தொடர்ச்சியாக, 348 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12.5 கி.மீ. நீளம் கொண்ட கோயம்புத்தூர் மேற்கு புறவழிச்சாலை, மற்றும் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12.4 கி.மீ நீளம் கொண்ட திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை உள்ளிட்ட 14 புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் மொத்தம் 1,713 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு தொடங்கும். மேலும், 48 கி.மீ. நீள மதுரை வெளிவட்டச் சாலை அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

203. பசுமையான தமிழ்நாடு என்ற இலக்கினை அடைந்திட நெடுஞ்சாலைகளைப் பசுமையாக்கும் ஒரு பகுதியாக, தமிழ் நிலப்பரப்பைச் சார்ந்த 'வேம்பு', 'புங்கை", "நாவல்', 'புளியமரம்' போன்ற இனவகைகளில் 10 இலட்சம் மரங்கள் நடப்பட்டு, புவிசார் குறியிடப்பட்டு முறையாகப் பராமரிக்கப்படும்.

204. அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய விபத்துகளைக் குறைப்பதன் மூலம், 'விபத்துகள் இல்லாத மாநிலம்' என்ற தொலைநோக்குப் பார்வையை செயல்படுத்தும் விதமாக, 200 கோடி ரூபாய் மதிப்பில் அதிக விபத்து நடக்கும் பகுதிகளான, குறுகிய வளைவுகள் மற்றும் சாலைச் சந்திப்புகள் மேம்படுத்தப்படும்.

205. பயணிகள் மற்றும் ஓட்டுநர்களின் வசதிக்காக, மாநில நெடுஞ்சாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 10 இடங்களில் சிற்றுண்டிச் சாலைகள், தங்கும் விடுதிகள், ஓய்வறை, மின் வாகனங்களுக்கான மின்சக்தி வழங்கிடும் வசதிகள், முதலுதவி மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சாலையோர

வசதி மையங்கள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

206. கன்னியாகுமரியில் நிறுவப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கண்ணாடி இழைப் பாலத்தினைப் பார்வையிட, நாடெங்கிலும் இருந்து சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளதால், கூடுதலாக சின்ன முட்டம் துறைமுகத்தினை இரண்டாவது முனையமாகக் கொண்டு திருவள்ளுவர் சிலை வரை பயணியர் படகுகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

207. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்கு 20,722 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர் நலன்**

208. முன்னாள் படைவீரர், அவர் தம் கைம்பெண்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கவும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு

உதவுவதை நோக்கமாகக் கொண்டு '**முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்**' அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், புதிய தொழில் முயற்சிகளுக்காக ஒரு கோடி ரூபாய் வரையிலான கடன்களுக்கு 30 சதவீதம் மூலதன மானியமும், 3 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. 2025-26 ஆம் நிதியாண்டில், 400 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர் இத்திட்டத்தினால் பயனடைவார்கள்.

**அரசு அலுவலர்கள் நலன்**

209. மாநிலத்தில் உள்ள தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ள காலிப் பணியிடங்களுக்காக இதுவரை 57,016 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 21,866 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆக மொத்தம் இந்த அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் 78,882 நபர்களுக்கு பணி நியமனம்

வழங்கப்பட்டுள்ளது. மேலும், 40,000 பணியிடங்களை வரும் நிதி ஆண்டிலேயே நிரப்பும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

210. அரசு அலுவலர்களுக்கு குறைந்த வாடகையிலான குடியிருப்புகளின் தேவை அதிகரித்து வருவதை நிறைவு செய்யும் வகையில், சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 110 கோடி ரூபாய் செலவில், இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் 190 'C' வகை குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

211. மக்கள் நலத்திட்டங்களை நாட்டிலேயே மிகச் சிறப்பாக நிறைவேற்றிட அயராது உழைத்து வரும் அரசு அலுவலர்கள் நலனைக் காப்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது. அதன் ஒரு பகுதியாக, அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக அரசு அலுவலர்கள் தங்களது ஊதியக் கணக்கைப் பராமரித்து வரும் தமிழ்நாட்டின் முக்கிய வங்கிகள், அரசு அலுவலர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கட்டணமின்றிப் பல சலுகைகளை அளித்திட முன்வந்துள்ளன.

- அரசு அலுவலர்கள் எதிர்பாராதவிதமாக விபத்தில் இறந்து போனாலோ அல்லது விபத்தின் காரணமாக நிரந்தர ஊனம் அடைந்தாலோ தனி நபர் விபத்து காப்பீட்டுத் தொகையாக 1 கோடி ரூபாய் நிதியினை வழங்கிட வங்கிகள் முன்வந்துள்ளன.

- விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகள்களின் திருமணச் செலவுகளுக்காக தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 10 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி வங்கிகள் வழங்கிடும்.

- விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக் கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர்கல்வி பயின்றிடும் மகளின் உயர் கல்விக்கான உதவித்தொகையாக 10 இலட்சம் ரூபாய் வரை வங்கிகள் வழங்கிடும்.

- அரசு அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் எதிர்பாராமல் இயற்கை மரணம் அடைந்தால்

ஆயுள் காப்பீட்டுத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் வங்கிகள் வழங்கிடும்.

- மேலும், தனிநபர் வங்கிக் கடன், வீட்டுக் கடன், கல்விக் கடன் ஆகியவற்றை அரசு அலுவலர்கள் பெறும் போது உரிய வட்டிச் சலுகைகள் வழங்கிடவும் முக்கிய வங்கிகள் முன்வந்துள்ளன.

212. அரசு அலுவலர்களுக்கு இந்தக் காப்பீடு உள்ளிட்ட சேவைகளை எதிர்வரும் 2025-26 ஆம் நிதியாண்டு முதல் வழங்கிட முன்வரும் வங்கிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதுடன், குறித்த காலத்திற்குள் இப்பயன்கள் அரசு அலுவலரின் குடும்பங்களுக்குக் கிடைத்திடுவதை தமிழ்நாடு அரசின் கருவூலத் துறை ஒருங்கிணைக்கும்.

**மனிதவள மேலாண்மை**

213. அரசு நிர்வாக நடைமுறைகளை எளிமையாக்குவதன் மூலம், பொதுமக்கள் இணையவழியிலேயே அரசு சேவைகளை விரைவாகவும் எளிமையுடனும்

பெற்றிடுவதற்காகத் தொடங்கப்பட்ட எளிமையான நிர்வாகம் (Simple Gov) எனும் திட்டத்தின் கீழ், எட்டு அரசுத் துறையின் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பெறுவதற்கான வழிமுறைகள் மிகவும் எளிமையாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரும் ஆண்டில், பல்வேறு துறைகளில், 150 சேவைகளை இணையவழியில் இம்முயற்சியின் கீழ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், வணிக நடைமுறைகளை எளிமையாக்குவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சிக்கு உதவிட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெள்ளை வகை தொழிற்சாலைகளின் பட்டியலை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

214. அரசு அலுவலர்கள் இணையவழியில் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில், முன்னணி கல்வி நிறுவனங்கள் வாயிலாக அவர்களுடைய விருப்பத்தின் பெயரில் கட்டணமின்றிப் பயின்றிட, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக சான்றிதழ் பெறக்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), பெருந்தரவுப் பகுப்பாய்வு (Data Analysis), திட்ட மேலாண்மை

(Project Management), தகவல் தொடர்புத் திறன் (Communication Skill) உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படும்.

**இலங்கைத் தமிழர் நலன்**

215. தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழர்களின் நலன் மற்றும் மறுவாழ்வை உறுதிசெய்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது. அவர்தம் கண்ணியமான வாழ்வினை உறுதி செய்திடும் நோக்கில், 7,469 புதிய வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் அடுத்தகட்டமாக முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கூடுதலாக 3,000 வீடுகள் 206 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

**மக்கள் குறைதீர்ப்பு**

216. பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கு இந்த அரசு அதிக முன்னுரிமை வழங்கி வருகிறது. முதல்வரின் முகவரி துறையின் மூலம் இதுவரை பெறப்பட்ட 93.86 இலட்சம் மனுக்களில், 89.58 இலட்சம் மனுக்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டுள்ளன. மனுக்களுக்குக் காணப்பட்ட தீர்வுகளின் மீது, மனுதாரர்களிடமிருந்து

பின்னூட்டங்கள் பெறப்பட்டு உரிய மேல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

217. பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமின்றி, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே, அவர்கள் அதிகமாக அணுகும் பதினைந்து அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று, 30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் '**மக்களுடன் முதல்வர்**' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை, **இத்திட்டத்தின்கீழ், 21.86 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது**.

**உள் துறை**

218. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையிலும், பிற குற்றங்களை உடனுக்குடன் கண்டுபிடித்து ஆராய்வதற்கான அமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கோடு, சென்னை மட்டுமன்றி தமிழ்நாட்டின் இதர முக்கிய நகரங்களான கோவை, திருச்சி, மதுரை, தாம்பரம் மற்றும் ஆவடி ஆகிய பகுதிகளிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில்

ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். குற்றங்களைத் தடுத்திடும் வகையில் நகரெங்கும் கண்காணிப்புக் கேமராக்கள், முக அடையாளம் காணும் மென்பொருள் அமைப்பு (Face Recognition System), தானியங்கி வாகன எண் கண்டுபிடிக்கும் மென்பொருள் அமைப்பு (Automatic Number Plate Recognition), ஆளில்லா வான்கலம் (Drones) அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் நுண்ணறிவு அடிப்படையிலான காணொலி பகுப்பாய்வு (Video Analysis) அம்சங்களை உள்ளடக்கிய இத்திட்டம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**பதிவுத் துறை**

219. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களின் பதிவைக் கையாண்டு வரும் சார்பதிவாளர் அலுவலகங்களை புதிய தொழில்நுட்ப வசதியுடன் நவீனமயமாக்கிட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதன்படி, பொதுமக்களுக்கு வசதியான குளிரூட்டப்பட்ட காத்திருப்போர் கூடம், இணைய வசதி, படிப்பகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தூய்மையான ஓய்வறைகள், மின்னணு நுழைவு அட்டை மற்றும் பரந்த வாகன நிறுத்துமிடம் ஆகிய அனைத்து வசதிகளையும்

கொண்டு, சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட மாநகராட்சிப் பகுதிகளில் 50 சார்பதிவாளர் அலுவலகங்கள் 30 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.

**பேரிடர் மேலாண்மை**

220. வெப்ப அலையினை மாநிலம் சார்ந்த பேரிடராக தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் வெப்ப அலையால் ஏற்படும் சுகாதார பாதிப்பு மற்றும் உற்பத்தித் திறன் இழப்பினைக் குறைப்பதற்கான தணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாநில அளவிலான வெப்ப அலை செயல்திட்டம் மட்டுமன்றி, பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், வேலூர், சேலம், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகள் ஆகிய 11 நகரங்களுக்கெனத் தனியே வெப்ப அலை செயல்திட்டங்கள் தயாரிக்கப்படும்.

221. பேரிடர் அபாயத்தை திறம்பட மேலாண்மை செய்து, அதன் தாக்கத்தைக் குறைத்திட, முதல் நிலை மீட்பாளர்கள், களப்பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்திட,

மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ் அதிநவீன வசதிகளுடன் கூடிய '**தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை நிறுவனம்**' ஒன்று 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்படும்.

**வருவாய்த் துறை**

222. ஏற்றத்தாழ்வற்ற, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன், சொந்த வீடற்ற / நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு விலையின்றி வீட்டு மனைப் பட்டா வழங்குவதை அரசு தன் முன்னுரிமைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இதுவரை 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் மாநிலம் முழுவதும் பல்வேறு பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 5 இலட்சம் பட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்படும்.

223. சென்னை மாநகர் மற்றும் அதன் சூழ்பகுதிகளில், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் தகுதியுடைய குடும்பங்களுக்கும், அதேபோன்று மாவட்டத் தலைநகரின் 16 கி.மீ. சுற்றளவிற்குள் உள்ள பகுதிகள் மற்றும் நகராட்சி மற்றும் பேரூராட்சியின் 8 கி.மீ. சுற்றளவிற்குள் உள்ள பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை வழங்க விதிக்கப்பட்ட

தடையாணை ஒருமுறை தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

224. உயர் தெளிவுத்திறன் செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் உதவியுடன், பன்முகத் தொழில்நுட்பங்களின் வாயிலாக உயர் தெளிவுத்திறன் பெருவிகித அளவிலான (High-Resolution Large-Scale Map) வரைபடம் ஒன்று நமது மாநிலத்திற்காக உருவாக்கப்படும். இதன் மூலம், நில அளவை, பேரிடர் மேலாண்மை, திட்டமிடல் மற்றும் இதர உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு இவ்வரைபடங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**நிதி மேலாண்மை**

225. டாக்டர் அரவிந்த் பனகாரியா தலைமையில் 16 ஆம் நிதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, நமது அரசு வலுவான கோரிக்கைகளை தகுந்த தரவுகளோடு முன்வைத்தது. அவற்றில், மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை

50 சதவீதமாக அதிகரித்தல், மாநிலங்களுக்கு இடையிலான நிதிப் பகிர்வுக்கு முற்போக்கான கணக்கீட்டு முறையைப் பின்பற்றுதல், மறுபகிர்வு என்ற பெயரில் வளர்ந்த மாநிலங்களுக்கு இழப்பு ஏற்படுத்துவதைத் தவிர்த்து, அவர்களின் செயல்திறனுக்கு உரிய நிதிப்பகிர்வை அளித்தல், வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புர மக்கள்தொகை, அடிக்கடி ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் மற்றும் முதியோர் மக்கள்தொகை போன்ற குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை ஒதுக்குதல் ஆகியவை முக்கியமானதாகும். தமிழ்நாட்டின் அறிக்கை குறித்து ஆணையம் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ள நிலையில், நமது அரசால் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள முற்போக்கான வழிமுறைகளை தற்போதைய நிதி ஆணையம் பரிந்துரைக்கும் என நம்புகிறோம்.

226. மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு வலுவான கடன் பொருளாதாரம் (Credit Economy) இன்றியமையாததாகும். இதனை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, வேளாண்மை, சிறு, குறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழு, கல்வி ஆகிய முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்கும்

வங்கிகளுக்கு, முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு, வரும் நிதியாண்டிற்கென 9.5 இலட்சம் கோடி ரூபாய் என உயர் இலக்கினை இந்த அரசு நிர்ணயித்துள்ளது. இது, கடந்த ஆண்டைவிட 17.47 சதவீதம் அதிகமாகும்.

227. தமிழ்நாடு அரசு ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையத்துடன் இணைந்து, வங்கிகள் கடன் வழங்கிடும் நடைமுறைகளை எளிமைப்படுத்திடும் வகையில், '**ஒருங்கிணைந்த கடன் வழங்கும் அமைப்பு**' (Unified Lending Interface) தொழில்நுட்பத்தை பல்வேறு வங்கிகள் மூலம் தமிழ்நாட்டில் விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது. இதன் மூலம், நமது விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள், சிறு மற்றும் குறு தொழில்முனைவோர்கள் என அனைவருக்கும், விண்ணப்பித்த மிகக் குறுகிய காலத்தில் கடன் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட உதவியாக இருக்கும்.

228. தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) கணக்கீட்டை துல்லியமாகக் கணித்திடவும், துறைவாரியான உற்பத்தியைக் கணக்கிடவும், அதிலும் குறிப்பாக

சேவை தொடர்பான துறைகளின் தரவுகளைச் சேகரிக்கவும், விரிவான நிறுவனக் கணக்கெடுப்புகளை அரசு திட்டமிட்டுச் செயல்படுத்த உள்ளது. 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் இக்கணக்கெடுப்புகள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை துல்லியமாக அளவீடு செய்வதற்கும், தரவு சார்ந்த கொள்கை முடிவுகளை அரசு எடுப்பதற்கும் வழிவகுக்கும்.

229. சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தினை வழங்கும் பொருட்டு நமது அரசு பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. விலைப்புள்ளிகள் கோருவதற்காக மின் ஒப்பந்தப்புள்ளி முறையை நடைமுறைப்படுத்துதல், விலைப்புள்ளிகளில் வங்கி உத்தரவாதத்தினை இணையவழியில் பெறுதல், ஒப்பந்ததாரர்களை இணையவழியில் பதிவு செய்தல் ஆகியவை இவற்றில் அடங்கும். அடுத்தகட்டமாக, பொறியாளர் அளவீடு புத்தகப் பதிவு, ஒப்பந்த மேலாண்மை, மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பட்டியல் தொகை செலுத்துதல் ஆகியவற்றை இணையவழியில் மேற்கொள்ளும் வகையில், '**ஒருங்கிணைந்த பணி மேலாண்மை அமைப்பு**' (Comprehensive Work Management System) என்ற ஒரு புதிய நடைமுறையை நமது அரசு செயல்படுத்த

உள்ளது. மேலும், இந்த மென்பொருளை களஞ்சியம் தளத்துடன் இணைக்கப்பெற்ற பின் மூலதனச் செலவினங்கள் மற்றும் திட்டங்களைக் கண்காணிக்கவும் மற்றும் விரைவாக முடிக்கவும் உறுதுணையாக இருக்கும்.

**சிறப்புத் திட்டச் செயலாக்கம்**

230. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் மக்களின் நீண்டகாலத் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி நிறைவேற்றும் நோக்கம் கொண்டது '**உங்கள் தொகுதியில் முதலமைச்சர்**' திட்டம். இம்முயற்சியின் கீழ் இதுவரை, 2023-24 மற்றும் 2024-25-ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் மொத்தம் 14,520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,266 பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றில் இதுவரை 389 பணிகள் 2,246 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## பகுதி-ஆ

## மாநில அரசின் நிதிநிலை

**சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,**

231. இதுவரை இந்த அரசின் முக்கிய திட்டங்களையும், அறிவிப்புகளையும் எடுத்துரைத்துள்ள நான், தற்போது மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன்.

232. 2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,95,173 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரி வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 1,92,752 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2,20,895 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வணிகவரிகளின் கீழ் 1,63,930 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் 26,109 கோடி ரூபாய், வாகனங்கள் மீதான வரிகளின் கீழ் 13,441 கோடி ரூபாய் மற்றும் மாநில ஆயத்தீர்வையின்

கீழ் 12,944 கோடி ரூபாய் வரி வருவாய் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாகும். மாநிலப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, வரி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், வரி வசூல் திறனில் முன்னேற்றம் ஆகியவற்றின் பலனாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2025-26 ஆம் ஆண்டில் 14.60 சதவீத வளர்ச்சி பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

233. 2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 30,728 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 28,124 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 28,819 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வருவாய் மதிப்பீடான 2,49,713 கோடி ரூபாய், மொத்த வருவாய் வரவுகளில் 75.31 சதவீதத்தைக் கொண்டிருக்கும்.

234. அரசின் பெருமுயற்சிகளால் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் உயர்ந்து வரும் அதே வேளையில், ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய உதவி மானியங்கள், ஒன்றிய வரிகளில் பங்கு ஆகியவை மொத்த வருவாய் சதவீதத்தில் குறைந்துகொண்டே வந்துள்ளன. ஒன்றிய அரசு, ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் நிதியை விடுவிக்காமல் நிறுத்தி வைத்ததும், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியை விடுவிக்க மறுத்ததும், மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் ஆகிய இரு தொடர் பேரிடர்களின் நிவாரணப் பணிகளுக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மிகச் சொற்பமான 276 கோடி ரூபாயை மட்டுமே விடுவித்ததும் மாநில அரசின் நிதிநிலையை வெகுவாகப் பாதித்துள்ளது.

235. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 23,354 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள், திருத்த மதிப்பீடுகளில் 20,538 கோடி ரூபாயாக கணிசமான அளவிற்கு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த

கல்வி திட்டத்தின் முழு பங்குத்தொகையை ஒன்றிய அரசு வரும் நிதியாண்டில் விடுவிக்கும் என எதிர்பார்த்து, ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய உதவி மானியங்கள் 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 23,834 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

236. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 49,755 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட ஒன்றிய வரிகளில் பங்கு, திருத்த மதிப்பீடுகளில் 52,491 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீடுகளில் இப்பங்கு உயர்ந்திருந்தாலும், ஒன்றிய அரசு தொடர்ந்து அதிக அளவில் மேல் வரிகளையும், கூடுதல் கட்டணங்களையும் விதிப்பதால் மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில், 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய வரிகளில் பங்கானது 58,022 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 6 சதவீதத்தைக் கொண்டிருக்கும் நாம், தேசியப் பொருளாதார வளர்ச்சியில் 9 சதவீதப் பங்களிக்கும்

அதே வேளையில், ஒன்றிய வரிகளில் தமிழ்நாட்டிற்கான பங்கானது வெறும் 4 சதவீதம் மட்டுமே என்பது, மாநிலத்திற்கு இழைக்கப்படும் அநீதியைத் தவிர வேறெதுவும் இல்லை.

237. ஒட்டுமொத்தத்தில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய தொகைகளின் விகிதம், கடந்த சில ஆண்டுகளில் தொடர்ச்சியாகவும் மிக அதிக அளவிலும் வீழ்ச்சியடைந்து வரும் வேளையில், 2016-17 ஆம் ஆண்டில் 3.41 சதவீதத்திலிருந்து, 2024-25 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் 1.96 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது. தற்போதைய மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், இந்த 1.45 சதவீதம் குறைவினால் மாநில அரசிற்கு ஏற்படக்கூடிய 45,182 கோடி ரூபாய் இழப்பானது, 2024-25 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 44.43 சதவீதத்திற்கு சமமாகும்.

238. சுருக்கமாக, 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,99,009 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவினங்கள், திருத்த

மதிப்பீடுகளில் 2,93,906 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவினங்கள் 3,31,569 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 12.81 சதவீதம் அதிகமாகும்.

239. செலவினங்களைப் பொறுத்தவரை, 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,48,289 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் செலவினங்கள், வளர்ச்சிப் பணிகள் சாரா செலவினங்கள் குறைந்ததன் காரணமாக, திருத்த மதிப்பீடுகளில் 3,40,374 கோடி ரூபாயாகக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினங்கள் 3,73,204 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 9.65 சதவீதம் வளர்ச்சி கொண்டதாகும்.

240. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 47,681 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மூலதனப் பணிகளுக்கான செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில்

46,766 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மூலதனப் பணிகளுக்கான செலவினங்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் தொடர்ச்சியாக, 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 57,231 கோடி ரூபாயாக மூலதனப் பணிகளுக்கான செலவினங்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 22.38 சதவீதம் வளர்ச்சி கொண்டதாகும். 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், நிகரக் கடன் உட்பட மூலதனச் செலவினங்கள் 65,328 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

241. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 49,279 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை, திறமையான நிதி மேலாண்மையின் பலனாக திருத்த மதிப்பீடுகளில் 46,467 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய உதவி மானியங்கள் நடப்பு ஆண்டில் குறைந்த போதிலும் வருவாய்ப் பற்றாக்குறை குறைவாகவே அமைந்துள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப்பற்றாக்குறை

மேலும் குறைந்து 41,635 கோடி ரூபாயாக இருக்கும், என மதிப்பிடப்பட்டுள்ளது. முதன்முதலாக 2015-16 ஆம் ஆண்டு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒரு சதவீதம் என்ற அளவினைக் கடந்த வருவாய்ப் பற்றாக்குறை, மாநில நிதி நிலைமை தொடர்ந்து சரிவை சந்தித்ததால், 2020-21 ஆம் ஆண்டில் 3.28 சதவீதமாக உயர்ந்தது. இந்த சரிவுப் போக்கினை நேர்மறையாக மாற்றிட வேண்டும் என, இந்த அரசு மேற்கொண்ட அயராத முயற்சிகளின் காரணமாக, அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து வரும் நிதியாண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வருவாய்ப் பற்றாக்குறையின் விகிதம் 1.17 சதவீதமாக, 2015-16 ஆம் ஆண்டு நிலைக்கு அருகில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

242. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,08,690 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 6,992 கோடி ரூபாய் குறைந்து, 1,01,698 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு குறைவாக மதிப்பிடப்பட்ட போதிலும், வரவு-செலவுத் திட்ட

மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3.44 சதவீதமாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 3.26 சதவீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1,06,963 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, நிதிநிலையை மேம்படுத்துவதில் அரசிற்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது.

243. நிகரக் கடன்கள் குறைந்துள்ளபோதிலும், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 26.41 சதவீதமாக மதிப்பிடப்பட்ட மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒட்டுமொத்தக் கடன் விகிதமானது, தற்போதைய மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் அடிப்படையில், 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் சற்றே அதிகரித்து 26.43 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவ்விகிதம் 26.07 சதவீதமாக

மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 15வது நிதிக்குழு 2025-26 ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்துள்ள 28.70 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

244. முத்தாய்ப்பாக, புகழ்பெற்ற அமெரிக்க கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்ட் அவர்களுடைய கவிதை வரிகளை நினைவு கூற விழைகிறேன்.

**"The woods are lovely, dark and deep**
**But I have promises to keep**
**And miles to go before I sleep**
**And miles to go before I sleep"**

இக்கவிதை வரிகள் உழைப்பு - உழைப்பு - உழைப்பு என ஓயாது, இமைப்பொழுதும் கண் துஞ்சாது தமிழ்நாட்டின் நலன் குறித்து எந்நாளும் சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகச்சரியாக பொருந்தி வருவதை இம்மாமன்ற உறுப்பினர்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

245. "**சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்**" எனும் வாசகத்தை முன்னிறுத்தி தமிழரின் முன்னேற்றப் பாதையை செதுக்கிடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சில முக்கிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்

246. கோவிட் பெருந்தொற்று பரவி இருந்த காலத்தில் தமிழ்நாடு அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெருஞ்சுமை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அரசு அலுவலருக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். அவற்றைக் கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, **அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஈட்டிய விடுப்பு நாட்களில் 15 நாட்கள் வரை, 01-04-2026 முதல் சரண் செய்து பணப்பலன் பெறுவதற்கான நடைமுறை மீண்டும் செயல்படுத்தப்படும்**. இதற்குரிய அரசாணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். அரசு அலுவலர் நலன் காக்கும் இந்த அறிவிப்பின் மூலம்

சுமார் ஒன்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

247. மகளிர்க்கு சம சொத்துரிமை வழங்கிடும் சட்டத்தை கடந்த 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் வெற்றிநடை பயின்றிடும் நமது திராவிட மாடல் அரசு தமிழ்ச் சமூகத்தில் மகளிருக்கான உயர் இடத்தையும், உரிய அதிகாரத்தையும் உறுதி செய்திடும் வகையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, சமூகத்தில் மட்டுமன்றி, அவரவர் குடும்பங்களிலும் மகளிருக்கான சமபங்கை உறுதி செய்திடும் வகையில், **வரும் 01-04-2025 முதல், 10 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையாச் சொத்துகள், பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்படும்**. தற்போது மேற்கொள்ளப்படும் பத்திரப் பதிவுகளில் 75 சதவீத பதிவுகள் இந்த அறிவிப்பினால் பயன்பெற இயலும். இதன் மூலம், மகளிரின் சுயசார்பும்

பொருளாதாரச் சுதந்திரமும் மேலும் உயர்ந்திடும் என்று இந்த அரசு நம்புகிறது.

248. மகளிர் நலன் காக்க சுய உதவிக் குழுக்கள், விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண், தோழி பணிபுரியும் பெண்கள் விடுதியென பல்வேறு முன்னோடித் திட்டங்களை நாடே வியந்து பார்க்கும் வண்ணம் நமது அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் அடுத்த கட்டமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் **ஒரு இலட்சம் மகளிரை தொழில்முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்**. இத்திட்டத்தின் கீழ் 20 சதவீத மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய் வரை வங்கிக் கடன் பெற்று, மகளிர் பல்வேறு தொழில்கள் தொடங்கிட உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், விற்பனைக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும். 2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான மானிய நிதியுதவிக்கென 225 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

249. செயற்கை நுண்ணறிவு உலகெங்கும் பெரும் தாக்கத்தை உருவாக்கி வரும் இந்த வேளையில், நமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் அவர்களின் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கிட வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது எழுந்துள்ளது. அதைக் கவனமாக பரிசீலித்த நமது அரசு, நான்கு வருடங்களுக்கு முன் மக்கள் மன்றத்தில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துக் கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்பச் சாதனங்களை வழங்கிடத் திட்டமிட்டுள்ளது. **முதற்கட்டமாக, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு, அவரவர் விருப்பத்தின் அடிப்படையில், ஒவ்வொருவருக்கும் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்**. எதிர்காலத்தில் உயர் தொழில்நுட்ப உலகில் நமது இளைஞர்கள் அறிவாயுதம் ஏந்தி வெற்றிவலம் வருவதை உறுதிசெய்திடும் நோக்கில் அறிமுகப்படுத்தப்படும்

இத்திட்டத்திற்காக 2025-26 ஆம் நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

250. நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றப் பேரவையின் மகத்தான தலைவர்களுள் ஒருவராக வரலாற்றில் இடம்பெறவிருக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், எல்லோருக்கும் எல்லாம் என்பதை உறுதி செய்திடும் வகையில், தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு வலுவான அடித்தளம் அமைத்திட நாம் இருமடங்கு உழைத்திடுவோம். இந்த வரவு-செலவுத் திட்டத்தினைச் செதுக்கிடத் தேவையான பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

251. இந்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் நிதித்துறையின்

பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

252. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**வாழ்க தமிழ்**

**வெல்க தமிழ்நாடு**

**திரு. தங்கம் தென்னரசு**
நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத் துறை அமைச்சர்

சென்னை
2025 ஆம் ஆண்டு
மார்ச் மாதம் 14 ஆம் நாள்
மாசித் திங்கள் 30 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2056

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-இன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)-இன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2025-26 ஆம் ஆண்டு முதல் 2027-28 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

**பொருளாதார நிலை**

வலுவான உற்பத்தித் தளம், சேவைத் துறையின் விரைவான விரிவாக்கம் மற்றும் நீடித்த பொது மற்றும் தனியார் முதலீடுகள் ஆகியவற்றால் உந்தப்பட்டு தமிழ்நாடு ஒரு முக்கிய வளர்ச்சி இயந்திரமாகத் திகழ்கிறது. பெரிய முதலீடுகளை ஈர்த்து, மின்னணுப் பொருட்கள் மற்றும் மின் வாகன (EV) உற்பத்தியின் தலைநகராக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. இத்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. மின்னணு ஏற்றுமதி 2021-22 இல் 1.66 பில்லியன் டாலரில் இருந்து 2023-24 இல் 5.37 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதுடன், 2024-25 ஆம் ஆண்டில் 12 பில்லியன் டாலரைத் தாண்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது, இது மாநிலத்தின் விரைவான தொழில்துறை வளர்ச்சி மற்றும் உலகளாவிய போட்டித் திறனைப் பிரதிபலிக்கிறது.

இந்த வலுவான பொருளாதார வளர்ச்சியுடன், தமிழ்நாட்டின் பெயரளவு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பு 2024-25 ஆம் ஆண்டில் 14.5 சதவீதமாக வளர்ச்சியடையும் எனவும், உண்மையான வளர்ச்சி 9 சதவீதமாகவும், சராசரி பணவீக்கம் 5.5 சதவீதமாகவும் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சாலை இணைப்புகள், வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் நகர்ப்புறங்களின் இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பெரிய அளவிலான உட்கட்டமைப்பு மேம்பாடு, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்கத்தைத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது. 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி ஆண்டுக்கு 15 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## I. வருவாய் வரவினங்கள்

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வு உட்பட, மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2024-25 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட வரவினமான 2,93,906.41 கோடியைக் காட்டிலும் 2025-26 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,31,568.76 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 2026-27 ஆம்ஆண்டில் 3,75,421.55 கோடி ரூபாயாகவும் 2027-28 ஆம் ஆண்டில் 4,25,648.81 கோடி ரூபாயாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது 2026-27 மற்றும் 2027-28 ஆம்

ஆண்டுகளுக்கு முறையே 13.23 சதவீதம் மற்றும் 13.38 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. **மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

மாநில அரசின் சொந்த வரி வருவாய், 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,92,752.43 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதற்கான அரசின் முயற்சிகளின் பலனாக, இது 14.60 சதவீதம் வளர்ச்சி பெற்று 2,20,894.58 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரி வசூல் திறனை மேம்படுத்துவதில் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக வரி மிதப்பானது 1.00 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2026-27 ஆம் ஆண்டில் 2,54,028.77 கோடி ரூபாயாகவும், 2027-28 ஆம் ஆண்டில் 2,92,133.08 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 15

சதவீதம் என, தற்போதைய வரிவசூல் மற்றும் எதிர்வரும் பொருளாதாரச் சூழலை கருத்திற்கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.

2. **வரி அல்லாத வருவாய்**

போக்குகளின் அடிப்படையில், 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 28,818.58 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் இனங்களைப் பெருக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய், ஆண்டுதோறும் 8 சதவீதம் வளர்ச்சி பெற்று, 2026-27 ஆம் ஆண்டில் 31,124.06 கோடி ரூபாயாகவும், 2027-28 ஆம் ஆண்டில் 33,613.99 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. **ஒன்றிய வரிகளில் மாநில அரசின் பங்கு**

2024-25 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், 52,491.88 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த ஒன்றிய வரிகளில் மாநில அரசுக்கான பங்கு 2025-26 ஆம் ஆண்டு வரவு-செலவுத்

திட்ட மதிப்பீடுகளில், ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள மதிப்பீடுகளின் அடிப்படையில், இது 58,021.50 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதம் 14.50 சதவீதமாக இருக்குமென கருதி, ஒன்றிய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு 66,434.62 கோடி ரூபாயாகவும், 2027-28 ஆம் ஆண்டிற்கு 76,067.64 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

4. **ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

2024-25 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 20,538.40 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் உரிய தொகை முழுமையாக வரப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டு, 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 23,834.11 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பங்குடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியை விடுவிப்பதில் புதிய முறையை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதன் காரணமாக,

2026-27 மற்றும் 2027-28 ஆம் நிதியாண்டுகளில், உதவி மானியம் அதே அளவில், 23,834.11 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## II. வருவாய் கணக்கில் செலவுகள்

2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினங்கள் 3,73,203.69 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 9.65 சதவீதம் அளவிற்கு அதிகமாக உள்ளது. வருவாய் செலவினம் 2026-27 ஆம் ஆண்டில் 4,06,703.78 கோடி ரூபாயாகவும், 2027-28 ஆம் ஆண்டில் 4,43,675.30 கோடி ரூபாயாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

❖ பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக 2025–26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 90,463.98 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டு திருத்த

மதிப்பீட்டைக் காட்டிலும் 11.05 சதவீதம் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. எதிர்பார்க்கப்படும் புதிய பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஊதியங்களுக்கான செலவினம் 2026-27 ஆம் ஆண்டு மற்றும் 2027-28 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே 1,00,415.02 கோடி ரூபாய் மற்றும் 1,11,460.67 கோடி ரூபாய் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான செலவினம் 16,921.78 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினம், ஆண்டிற்கு 8 சதவீதம் வளர்ச்சி பெற்று, 2026-27 ஆம் ஆண்டில் 18,275.52 கோடி ரூபாயாகவும், 2027-28 ஆம் ஆண்டிற்கு 19,737.56 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

❖ பொறுப்பேற்ற ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு 2025-26 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 41,290.40 கோடி ரூபாயாக

இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் ஓய்வுபெறுவோரின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களின் கீழ் வரும் செலவினங்கள், 2026-27 ஆம் ஆண்டில் 46,245.25 கோடி ரூபாய், 2027-28 ஆம் ஆண்டில் 51,794.68 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

❖ 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான செலவினம் 1,53,723.87 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான செலவினம் ஆண்டு ஒன்றிற்கு 5 சதவீதம் வளர்ச்சி பெற்று, 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டுகளில் முறையே 1,61,410.06 கோடி ரூபாய் மற்றும் 1,69,480.57 கோடி ரூபாயாக கணிக்கப்பட்டுள்ளது.

❖ முந்தைய ஆண்டுகளில் திரட்டப்பட்ட பொதுக் கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2025-2026 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வட்டி செலுத்துதலுக்கான செலவினம் 70,753.99 கோடி ரூபாயாகும். இந்த செலவினம் 2026-27 ஆம் ஆண்டில் 80,305.78 கோடி ரூபாய் மற்றும் 2027-28 ஆம் ஆண்டில் 91,147.06 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கு

2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 46,766.03 கோடி ரூபாயைக் காட்டிலும் 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 57,230.96 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2024-25 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 22.38 சதவீதம் அதிகமாக உள்ளது. மூலதனச் செலவினங்களை ஊக்குவிப்பதற்கான அரசின் முயற்சிகளின் காரணமாக, மூலதனச் செலவினம் 2026-27 ஆம் ஆண்டில் 71,538.70 கோடி ரூபாயாக இருக்கும் எனவும் 2027-28 ஆம் ஆண்டில் 89,423.38 கோடி ரூபாய் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தைப் பராமரிக்கும்

அதேவேளையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதியை இது காட்டுகிறது. நிகரக்கடன்களும் முன்பணங்களும் 2025-26 வரவு-செலவுத் திட்டத்தில் 8,102.37 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிகரக் கடன்களும் முன்பணங்களும் 2026-27 ஆம் ஆண்டில் 12,963.79 கோடி ரூபாயாகவும் 2027-28 ஆம் ஆண்டில் 19,445.69 கோடி ரூபாயாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

2025-26 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 41,634.93 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரிவசூலை மேம்படுத்துதல், வரி விகிதங்களை சீரமைத்தல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, வருவாய்ப் பற்றாக்குறை 2026-27 ஆம் ஆண்டில் 31,282.23 கோடி ரூபாயாக குறையும் எனவும், அதன் தொடர்ச்சியாக 2027-28 ஆம் ஆண்டில் 18,026.48 கோடி ரூபாயாக குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது கூடுதல் மூலதனச் செலவினத்திற்கு வழிவகை செய்யும்.

2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் விகிதம் 3.00 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டுகளில், இது முறையே, 2.82 சதவீதம் மற்றும் 2.69 சதவீதமாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிற்குள் உள்ளது.

## V. கடன்கள்

ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் பெறுதலும் திரும்பச் செலுத்துதலும் மதிப்பிடப்பட்டுள்ளன. 2025-26 ஆம் ஆண்டில் மாநில அரசு 1,62,096.76 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. மேலும், 55,844.53 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும். இதன் விளைவாக, 31.03.2026 அன்று நிலுவையில் உள்ள கடன் 9,29,959.30 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 2025-26 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி

மதிப்பில் இது 26.07 சதவீதம் ஆகும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் விகிதம் 2026-27 ஆம் ஆண்டில் 25.49 சதவீதமாகவும், 2027-28 ஆம் ஆண்டில் 24.85 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு, சீரிய நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனை தக்கவைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி, நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 50.16 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 4.49 சதவீதமாகவும் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி, மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 18.23 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 1.63 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

தற்போது நிலவும் பொருளாதாரச் சூழலில், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகமாக உள்ளது, நமக்குச் சாதகமானதாகும். நமது உயர் வளர்ச்சி வீதம் வரும் காலங்களிலும் தொடரும். நிதி ஆதாரங்களைப் பெருக்கியும், வரி வசூல் திறனை

அதிகரித்தும், மாநிலத்தின் மொத்த வருவாயின் உயர் வளர்ச்சி வீதத்தை தக்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நிதி ஒருங்கிணைப்பை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறைகளைத் தொடர்ந்து கடைபிடித்து, மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்குத் தேவைப்படும் கூடுதல் மூலதன மற்றும் வருவாய்ச் செலவினங்களை மேற்கொள்வதற்கும் இந்த அரசு தொடர்ந்து முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.

*********